விலை ரூபா 2-00

12 பக்கங்கள்

RECEIVED 28-11-1984 PERIODICALS DIVISION

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 கார்த்திகை 17 ரபி-அவ் 8 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (2—12—84) இதழ் 290

## முல்லைத்தீவில் 'பு லி க ள்!'

[கொழும்பு]

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த பண்ணைத் தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகளே செய்தார்கள். தமிழ் நாட்டில் அவர்கள் உரிமை கோரியுள்ளார்கள் என்று தேசிய பந்தோபஸ்த்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றுத் தெரிவித்தார்.

## இந்தியா மீண்டும் அறிவிப்பு இலங்கையை ஆக்கிரமிக்க எங்கும் ஆயுதப்பயிற்சி இல்லை!

(புதுடில்லி)

இலங்கையின் குற்றச் சாட்டுக்கள்குறித்து இந்தியா அதிர்ச்சி தெரிவித்துள்ளது டன், வன்மையாக மறுத் துள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் தீவிரவாதிகள் தளம் அமைத்துள்ளார்கள் என்ற இலங்கையின் கூற்றைக் கடு மையாக கண்டித்துள்ளது.

இலங்கை யுத்த மனப் பிராந் திய நிலையிலிருப்பதாகக் குறிப் பிட்டு, இலங்கையை ஆக்கிர மிக்க இந்தியாவின் எந்த ஒரு மூலையிலும் ஆயுதப் பயிற்சி நடக்கவில்லையென்றும் இந்த ப்பச்சுக்கே இடமில்லையென் றும் உறுதியாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்திய வெளியுறவு அமைச் சின் பேச்சாளர் இலங் கையின் சமீபத்திய குற்றச் சாட்டுகள் குறித்து இந்தியா

(12ம் பக்கம் பார்க்க)

## கொலை நடந்த கென்பாம், டொலர்பாம்

(முல்லைத்தீவு)

குடியேற்ற வாசிகள் பலர் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் 'கென்ற் பாம்' 'டொலர் பாம்' ஆகியன முல் லைத்தீவு மாவட்டத்தில் ஒதிய மலைக்கு 5மைல் தூரத்தில் உள்ளன.

இந்த இருபண்ணைகளிலும், ஜுலை 83 கலவரத்தில் பாதிக் கப்பட்டு, மலைநாட்டிலிருந்து வந்த சுமார் 2000 தமிழ் அகதி கள் குடியோற்றப்பட்டார்கள் என்றும் அண்மையில் இந்த குடியேற்றத் திட்டத்திற்கு நடுவில் ஒருஇட த்தில் வெளிமாவட்டத்திலி ருந்து சிலர் குடியேற்றப்பட் டனர் என்றும் கூறப்படுகிறது.

பெரியகுளம், குருந்தூர்மலை களில் தலைமுறை தலைமுறை யாக தமிழ் குடும்பங்கள், நிரந்தரமாக இருந்து விவ சாயம் செய்து வருகின்றார்கள் என்றும் கூறப்படுகிறது.

## நெடுந்தீவில் இறங்கிய 10பேர் சுடப்பட்டனர்!

(கொழும்பு)

இலங்கை கடற்படையினர் நேற்றுக் காலை ஒருபடகின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த னர். என்றும் அந்த வள் ளத்திலிருந்த 10 தீவிரவாதிக ளில் ஒன்பதுபேர் உடனடி யாகக் கொல்லப்பட்டனர் என் றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் நேற்று செய்தியா ளர்களிடம் தெரிவித்தார்.

வடபகுதிக் கரையோரத் துக்கு அப்பால் நெடுந்தீவில் இந்தத் தீவிரவாதிகள் இறங்கு வதற்கு முற்பட்டார்கள். பத் தாவது நபர் கடும் காயத்துக் குள்ளானர். பின்னர் இவர் இறந்துவிட்டார் என்றும் அமைச்சர் கூறினர்.

தென்னிந்தியாவில் பயிற்சி யைப் பெற்றுவிட்டு, இலங் கைக்கு இவர்கள் புறப்பட்டி ருந்தனர் கடந்த வியாழக் கிழமை இரவு வடபகுதிக் கரையோரத்தில் சென்று இறங்கிய தீவிரவாதிகள்தேடப் பட்டு வருகின்றனர். என்றும் அமைச்சர் கூறினர்.

## பத்திரிகையின் 'பயங்கரப் போர்'

வடபகுதி பொதுமக்கள் உயிர்ச்சேதம் மேலும் ஏற் படாது தடுப்பதற்கு, குடாநாட்டை விட்டு வெளி யேறுமாறு பாதுகாப்பு அமைச்சர் கோரிக்கை விடுத்தி ருப்பதாக ஒருபத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. பத்திரிகைப் போர் புலனவிப்பதானல் வெற்றி எப் பவோ கிட்டியிருக்கும்.

பட்ஜெட் விவாதத்தில் பேசும் போது இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டாரென்று கூறும் பத்திரிகை அதற்கு முக்கியத்துவம் அளித்து பிரசுரித்திருக்கிறது. உள்வீட்டுப் பிள்ளையின் உதவிபோல தெரிகிறது.

நண்பருடன் அல்லது உறவினருடன் ஒரு விடுமுறை றையை நாட்டின் வேறு பகுதிகளில் கழிப்பது உசித மென்பது செய்தியின் தாற்பரியம். அது நிறைவேறுமா ஞல் யார் அப்பாவிகள்? யார் குழப்பக்காரர்? என்பது புலப்படுமென்பதும் இக்கோரிக்கையின் நோக்கமென்று சொல்லப்படுகிறது.

எந்த அபாய சூழ்நிலையிலும் யாழ்ப்பாணத்துக்கு கப்பலிலும், காடியிலும் வந்திறங்கும் இப்பகுதி மக் கள் இனி இங்கிருந்து வேறெங்குபோவது? நண்பர்களு டனும், உறவினருடனும் விடுமுறை கழிக்கும் வசதியு டையவர்கள் இதனைக் கண்டஞ்சி அவ்வாறு பிரதேசம் போவார்களென்பது சந்தேகம்.

நிச்சயம் அப்பாவி மக்கள் இச் செய்தியால் நடுக்க மடையார். ''மன்னவனும் நீயோ வள நாடும் உன் னதோ'' என்றார் கம்பர். இன்று இங்கு வாழும் மக் கள் படும் துன்பம் அவர்களுக்கு புலமை அளித்திருக் கிறது.

மன்னவனும் நீயோ வடநாடும் உன்னதோ என்பது அவர்களின் மனோநிலையாகும்.

## முல்லைத்தீவு கிராமங்களில் நூற்றுக்கு மேலானவர் பலி?

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்டத்தி லுள்ள ஒதியமடு, குறுந்தூர் மலை, பெரியகுளம் கிராமங் களில் நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதலில் நூற்றுக்கு மேற் பட்ட மக்கள் பலியானதாக வும், அநேகர் பலத்த காய மடைந்ததாகவும் அஞ்சப்படு கிறது.

அப்பகுதி உதவி அரசாங்க அதிபர், கிராம சேவகர்களின் உதவியுடன் பலியானவர் களின் சடலங்களை யும் காயமடைந்தவர்களை யும் கொண்டுவர ஏற்பாடு செய்துள்ளதாகக் கூறப்படுகின் றது.

நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமாக்கப்பட்டிருப்பதாக வும், ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகி உள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

முல்லைத்தீவு நகரத்திலிருந்து 16 மைல்களுக்கு அப்பாலுள்ள நெடுங்கேணிச் சந்தியிலிருந்து சுமார் எட்டுமைல் தூரத்தி லுள்ள பெரியகுளத்திற்கு நேற்றுமுன்தினம் சகல போக்கு வரத்துக்களும் துண்டிக்கப்பட் டுள்ளன. இதனால் பாதிக்கப் பட்ட மக்கள் கிராமங்களிலிரு ந்து வெளியேறமுடியாத நிலை யிலிருப்பதாகக் கூறப்படுகின் றது.

## ஏழு நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும்

(கொழும்பு)

பாதுகாப்பு வலயத்துள் நிரந் தரமாக வசிக்காதவர்கள் புதிய பாதுகாப்பு விதிகள் அமுலுக்கு வந்துள்ள 30ம் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் சமீபத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கவேண்டும்.

யாழ் மாவட்டமும், கிளி நொச்சியிலுள்ள ஏழு கிராம சேவையாளர் பிரிவுகளும் பாது காப்பு வலயத்துள் கொண்டு வரப்பட்டுள்ளன இந்த விப ரங்கள் வர்த்தமானிமூலம் அறி விக்கப்பட்டுள்ளது.

வாகனங்களும், சைக்கிள் களும் வைத்திருப்பதற்கு பொலிஸ் அனுமதி பெறவேண் டும் என்றும், காலை 6—8-30 மணிவரையிலும், பிற்பகல் 2—4 மணி வரையும் வாகனங் கள் குறிப்பிட்ட வீதிகளில்மட்டும் செல்வ தற்கு அனுமதி வழங்கப்படும்' வாகனங்களுக்கு குறிப்பிட்ட வீதிகளால் செல்வதற்கு குறிப்

(12 ம்பக்கம் பார்க்க)

## இம்மாதம் தீவிரவாதிகளின் முக்கிய போராட்டம்!

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து இராணு வத்தை விரட்டியடிக்கும் முக் கிய போராட்டத்தைத் தமிழ் தீவிரவாதிகள் இம்மாதம் நடாத்தவுள்ளனரென்று நேற்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினர்.

வடபகுதியிலிருந்து அரசாங்க பாதுகாப்புப் படைகளை வெளி யேற்றுவது என்று தீவிரவாதி கள் திட்டமிட்டிருப்ப தாகவும் இந்த முக்கிய நடவடிக்கையை அவர்கள் இம் மாதம் நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் சொன்னர்

தமிழ்நாட்டில் தமிழ்த்தீவிர வாத இயக்கத் தலைவர்கள்

(12ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் லலித் அறிவிப்பு சுட்டுத்தள்ளப்படும்!

இ. கந்தசாமி

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை நோக்கிவரும் எந்த வள்ளமும் சுட்டுத் தள்ளப்படும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று அறிவித்தார்.

தமிழ் நாட்டிலிருந்து தீவிரவாதிகளை ஏற்றிக் கொண்டு வந்த பதினெட் டுப் படகுகளை விரட்டியடித்து விட்டதாகவும் அவர் சொன் னர்.

இலங்கை வந்து இறங்கமுற் படும் இலங்கைக் கடற் பிரதே சத்தை நோக்கிவரும் எந்த

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிவரித் விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு ஒழுங்கையில் இல. 11 வட்டுக்கு முன்னுல் இருக்கும் வீடு கட்டுவதற்கு ஏற்ற 1¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விநாயகர் மில், அம்பனை, தெல்லிப்பளை. 910

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் பாடசாலைகள், கோவில்கள், தபால்கந்தோர் ஆகியவற்றிக் கண்மையில் செய்பயிர்களுடனும், நன்னீர்க் கிணற்றுடனும் 6 பரப்புக்காணி வீட்டுடன் உடனடி விற்பனைக்குண்டு தொடர்பு: A C மகேந்திரன், நீர்வேலிவடக்கு, நீர்வேலி. 872

வீட்டுத்தளபாடங்கள், பாவனைப்பொருட்கள், மின்சார உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜிமி ராஜரட்ணம், 24, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 921

நல்ல நிலையிலுள்ள (றேடியோ எயர்கென்டிசன் பொருத்தப்பட்ட) லன்சர் ஸ்ரேசன் வகன் 12 ஸ்ரீ 4374 கார் விற்பனைக்குண்டு தொடர்பு: ஜிமி ராஜரட்ணம், 24, கண்டி வீதி, யாழ்ப்பாணம் 919

சுன்னுகம் இலங்கை வங்கிக் கருகாமையில் வீடு கட்ட தொழில்ஸ்தாபனம் அமைக்கக் கூடிய இரண்டு பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. பொ. வடிவேலு, 136, பிரதான வீதி, சுன்னுகம் அல்லது ரி. சிறீபதி சட்டத்தரணி, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 877

யாழ்ப்பாணம் அத்தியடி புதிய வீதி 10ம் இலக்கத்தில் ஒன்றேமுக்கால் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர்தேவையில்லை விபரம் நேரில். 898

கயிலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 88/4 (174/11) ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணத்தில் 5 பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு மேற்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 890

T V 14'' டொசிபா கலர், குளிர்சாதனப்பெட்டி (Sisil) துணி தோய்க்கும் மெசின் (National) வானெலிப்பெட்டி (National) மபல்லிங் குக்கர் மற்றும் வீட்டுத்தளபாடங்கள் (மேசை, கதிரை, கட்டில்கள்) தொடர்பு: 15/7, பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு (குளோப் றக் மாட் கராயிற்கு அருகாமையில்) 911

புலோலி தெற்கு புற்றளைப் பிள்ளையார் கோவிலுக்குக் கிழக்குப் பக்கமாகத் தென்கிழக்கு மூலையில் இருக்கும் கட்டைப் புளியடி வயல் என்னும் பெயருடைய காணி— நெற் பரப்பு: 6 குளி 6¾ —விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 923, C/o ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 923

## வாடகைக்கு

கொக்குவிலில் சகல வசதிகளுடன் நல்ல நிலையில் வீடு வாடகைக்குண்டு V ஸ்ரீகுமரன், 10, கல்லூரி வீதி, கொக்குவில். 922

கச்சேரிக்கும், பாடசாலைகளுக்கும் அண்மையில் சகல வசதிகளுடன் (தொலைபேசி உட்பட) வீடு வாடகைக்கு உண்டு தொடர்பு: ஜிமி ராஜரட்ணம், 24, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 920

## தேவை

யாழ் நகரிலிருந்து 4 மைல்களுக்குள் சிறிய குடும்பத்திற்கு (அரசாங்க உத்தியோகத்தருக்கு) சகல வசதிகளுடன் சிறிய வீடு அல்லது Annexe வாடகைக்கு தேவை. விளம்பர இல. 896, C/o ஈழநாடு. 896

சுழிபுரம் கிழக்கு விவேகானந்தா விளையாட்டுக் கழகம்

**அதிர்ஷ்ட்ட லாப சீட்டிழுப்பு முடிவுகள்**

1ம் பரிசு இலக்கம் 06

2ம் பரிசு இலக்கம் 804

3ம் பரிசு இலக்கம் 1455

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 1வது சீட்டிலக்கம் | 1689 |
| 2வது சீட்டிலக்கம் | 1979 |
| 3வது சீட்டிலக்கம் | 964 |
| 4வது சீட்டிலக்கம் | 955 |
| 6வது சீட்டிலக்கம் | 1245 |

காரியதரிசி

924

100 லன்ச் சீட் ரூபா 6/- 100 குரோசரி பேக் ரூபா 4/50 முதல் ரூபா 15/- வரை. 100 லூப்பிங் பேக் ரூபா 18/- 100 மார்கெட்டிங் பேக் ரூபா 45/- 100 கரியர் பேக்ஸ் ரூபா 180/- 1 கிலோ பொலித்தீன் ரூபா 35/- 1 பைக்கட் டிரிங்கிங் ஸ்ட்ரோஸ் ரூபா 8/50- வியாபாரிகளுக்கு கவர்ச்சியான கழிவுகள்.

**சீக்கோ டிரேடர்ஸ்**

180/6-7B கெய்சர்வீதி, கொழும்பு–11

806

ஊர்காவற்றுறை

ப. நோ. கூ. சங்கம்

**கேள்விப் பத்திரம்**

இரண்டாயிரத்தி நூற்றிமுப்பது (2130) வெற்றுச்சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூ 2/50 செலுத்தி சங்கத்தில் பெற்றுக் கொண்ட பத்திரத்தில் "பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை" என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்களை 5-12-84ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

கேள்விப்பத்திரங்கள் 4-12-84ந் திகதி பகல் 12 00 மணிவரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூபா 750 - வைப்புப்பணம் செலுத்தி இருத்தல்வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**

28-11-84
ஊர்காவற்றுறை. 908

# ராஜேந்திர பிரசாத்

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

அவருக்குத் தள்ளாத வயது திகைத்துப் போவார்.''

இப்படி அக்கடிதத்தில் பாபுஜி எழுதியிருந்தார். ஆயினும் குடும்ப பாசம் காரணமாக அவர் சங்கத்தில் சேர்ந்து கொள்ளவில்லை.

## மகாத்மாவுடன் தொடர்பு

1916 இல் லக்னேவில் கூடிய காங்கிரஸ் மகா சபையைத் தொடர்ந்துதான்மகாத்மாவுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது அக்காலத்தில் பீஹாரில் 'அவுரி' சாயப் பயிர் கட்டாயமாகப் பயிரிட வேண்டுமென்று சகல விவசாயிகளுக்கும் பணிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயருக்கு அதிக வருமானத்தைத் தரும் இப் பயிர் செய்கையினுல் உள்நாட்டு விவசாயிகள் பாதிப்படைந்தனர் இதற்காக மகாத்மா அறப்போர் நடத்தினுர். ராஜேந்திரப் பிரசாத் இக் போராட்டத்தில் பெரும் பங்கு வகித்தார். இதனைத் தொடர்ந்து இருவரின் நெருக்கமும் அதிகரித்தது.

## சிறை சென்றுர்

சுதந்திரப் போராட்டத்தில் வெகுவாக உழைத்து வந்த ராஜன் பாபு 1930 இல் காந்திஜியின் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டு ஆறு மாதங்கள் சிறை சென்றுர். 1932 இல் மீண்டும் சிறைவாசம் செல்ல நேர்ந்தது சிறையில் கடுமையான காசநோயினுல் பீடிக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகள் சிறையிலேயே வாழ்ந்தார்.

## இடைக்கால அரசில்

சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜி காட்டிய அகிம்சை வழியில் போராடிய ராஜேந்திரப் பிரசாத் வைசிராயின் கோரிக்கையின் படி 1945 ல் இந்தியரினுல் உருவாக்கப்பட்ட இடைக்கால அரசில் உணவு மந்திரியாக இருந்தார். உணவுத் தட்டுப்பாடு மிகுந்த அக்காலத்தில் அதனைச் சமாளிக்க அரும்பாடுபட்டார், இந்தியாவைப் பிளவு படாமல் தடுப்பதற்காக முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னுவுடன் பல சமரச ஏற்பாடுகள் இவரின் முயற்சியினுலேயே மேற்கொள்ளப்பட்டது ஆயினும் அதில் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

## ஜனுதிபதியாக

1947 இல் நாடு சுதந்திரம் பெற்றமையைத் தொடர்ந்து 1950 ஜனவரி 26 இல் இந்தியா குடியரசாகியது. அதன் முதலாவது ஜனுதிபதியாக ராஜன் பாபு தெரிவு செய்யப்பட்டு பெருமை பெற்றுர், இரண்டாவது முறையும் அவர் அப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்திய அரசியல்சட்டம் உருவாக்கும் குழுவுக்கும் இவரே தலைமைதாங்கினுர்

எளியதோற்றமும், எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பும் கொண்ட இவர் அடக்கம், பொறுமை, நேர்மை என்பவற்றின் உறைவிடமாகத் திகழ்ந்தார். காந்திஜிபோதித்த அகிம்சை, சத்தியம் இரண்டும் உயிர் மூச்சாக இருந்தன. மிக உயர்ந்த ஜனுதிபதி பதவியிலிருந்தபோதும் எளிமையான வாழ்க்கையையே மேற்கொண்டார் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

## மனஉறுதி

பாபுஜி அவர்களை அவரது மூத்தசகோதரியே வளர்த்தார். 1960ல் சகோதரி காலமாகிவிட்டார். இதற்கு மறுநாள் இந்தியக்குடியரசு தினமாகும். இக்கொண்டாட்டத்தில் சகோதரின் மரணச்செய்தி தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக அதனை பாபுஜி தமது மரணச்செய்தியை வெளியிடவே இல்லை. அன்று இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பியபின்னரே மரணச் செய்தியை வெளியிட்டார். சொந்த விவகாரங்களுக்காக ராஜாங்க வேலைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதே அவரது நோக்கமாகும்.

அடக்கத்தின் பிறப்பிடமாகத் திகழ்ந்து காந்தியின் அகிம்சை வழியில்இந்தியாவை வழிநடத்திய இப்பெருந்தலைவரின் சேவையைப் பாராட்டி இந்திய அரசு 1962 'பாரத ரத்னு' விருது வழங்கியது.

இத்தகைய உயர்ந்த மனிதர் ஜனுதிபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்திருந்தார். அவரது விஜயத்தின்போது யாழ் மா நகரசபை அவருக்கு அன்பான வரவேற்பளித்துக்கௌரவித்தது அவரது விஜயம் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தது மிகப்பெரிய பாக்கியமாகும். அவரது யாழ்ப்பாணவருகையின் நினைவாகயாழ்மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதிக்கு ராஜேந்திர பிரசாத் வீதி எனப்பெயரிப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு அவர் விமானமூலம் வந்து பலாலி விமான நிலையத்தில் இறங்கிய போது அப்போது மயிலிட்டிக் கிராமசபைத் தலைவராயிருந்த சுவாமிநாதன் அவர்களுடன் பாபுஜி மகிழ்ச்சி பொங்கச் சம்பாஷித்தார். பாபுஜி ஆசிரியர் தொழில் பார்த்த சமயம் திரு சுவாமிநாதன் அவர்கள் அக்கல்கல்லூரி விடுதி மேற்பார்வையாளராயிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

வாழ்வின் இறுதிக்காலத்தை பாட்னுவிலுள்ள அவரது 'சதாகத்' ஆச்சிரமத்தில் கழித்த அவர் 1663 மார்ச் 1இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**T. C. C.** குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்

**ரெருசோ மாபிள் நிலம்**

அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்

**த ரெருசோ கொன்ருக்ரேஸ் அன் கொன்சல்ரன்ஸ்**

தலைமை அலுவலகம் :-
69, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

64, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

குயிக் சோஸ் லிமிட்டெட்டும்
த சென்றல் பினுன்ஸ் கம்பெனி
லிமிட்டெட்டும் ஒன்றிணைந்து செய்யும்

**வெளிநாடுகளுக்கான விமானப் பயண ரிக்கற் ஒழுங்குகள்**

எந்தநாட்டுக்கு எந்த நேரத்தில்
பிரயாணம் செய்யவேண்டும்?
தொடர்பு கொள்ளுங்கள்:
(கிழமைநாட்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

**த சென்றல் பினுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

217, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சிவன் கோவிலடி) தொலைபேசி :24360

சிறு கைத்தொழில் திணைக்களத்தினுல் நடாத்தப்படும் யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னுகம் இயந்திர சாதன மரவேலைப் பாடசாலைகளுக்கு மரவேலைப் பயிற்சிக்கு ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## மரவேலைப் பயிற்சி ஒருவருடம்

| | |
|---|---|
| தேவையான தகைமைகள்: | 8ம் வகுப்பில் சித்தி, 5, 6, 7ம் வகுப்பில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். |
| வயது: | 14 முதல் 30 வரை |
| வேதனம்: | பயிற்சிக் காலத்தில் ஒரு நாளைக்கு 5 ரூபாவும், செய்யும் வேலையின் 80 வீத லாபப் பணமும் உதவி அதிபரின் தீர்மானப்படி வழங்கப்படும். (1984ல் 80 வீத லாபப் பணமாக சில பயிற்சியாளர் மாதத்துக்கு 5000/- ரூபாவும் பெற்றுள்ளனர்). |

175 நாட்கள் பயிற்சி பெற்றவர்களுக்குப் பரீட்சை நடாத்தி டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். இச்சான்றிதழ் பெற்றவர்களுக்கு மொறட்டுவவிலுள்ள எமது உயர் தொழில் கல்வி நிறுவனத்தில் 6 மாதப் பயிற்சி பெற்றதும் இயந்திர மரவேலை டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும் இவர்களுக்கு மரவேலைப் பாடசாலைப் பயிற்சி நிலையங்களில் ஆசிரியர் வெற்றிடங்கள் ஏற்படும்போது முன்னுரிமை வழங்கப்படும்.

பெயர், விலாசம், கல்வித் தகைமை, வயது அடங்கிய விண்ணப்பங்கள் யாவும் 17-12-84ந் திகதிக்கு முன் உதவி சிறு கைத்தொழில் அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்புதல்வேண்டும். (விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழின் பிரதியும், பாடசாலை விடுகைப் பத்திரப் பிரதியும் அனுப்புதல் வேண்டும்.)

**உதவி அதிபர்**

903 சிறு கைத்தொழில் பகுதி/யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# இந்திரா, எம். ஜி. ஆர்.

# இலங்கையின் நலன் விரும்பிகள்!

## இவர்களைபற்றி பெரும்பாலான இலங்கையர்க்கு நன்கு தெரியவில்லை

கடந்த நவம்பர் 21ந் திகதி கலாநிதி ரால்ப்வ் புல்ஜென்ஸ் (Dr. Ralph Buultjens) கொழும்பு 'மார்கா' நிறுவனத்தில் இலங்கை-இந்திய அரசியல் விவகாரம் பற்றி நிகழ்த்திய விரிவுரை இது. கலாநிதி புல்ஜென்ஸ் மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மிகநெருங்கிய நண்பராவார். இவர் ஒரு இலங்கையர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இரு முக்கிய இந்தியப் பிரமுகர்களாக அண்மைக் காலங்களில் விளங்கிய திருமதி இந்திராகாந்தியும், திரு எம். ஜி. இராமச்சந்திரனும் இப்போது இந்தியாவில் இல்லை.

இந்த இருவரும் இலங்கை தொடர்பாகக் கொண்டிருந்த கொள்கைகளை இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் அறிந்திருக்கவுமில்லை; அவற்றை நன்கு கணிக்கவுமில்லை. இவர்கள் இலங்கையின் நலன் விரும்பிகளாகவே இருந்தனர்.

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையிலான உறவில் ஆழமான புரிந்துணர்வுகாணப்படவேண்டும். இவ்விரு நாடுகளும் கூடிய விரைவில் தம்மிடையே பிரதேச, மற்றும் விவகாரங்கள் தொடர்பாக உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளவேண்டும்.

### சிறந்த தலைவர்

மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் மூன்று



முக்கிய சிறப்பம்சங்கள் காணப்பட்டன.

அவர் ஒரு உயர்ந்த தரத்திலான ராஜதந்திரி.

கெட்டித்தனமான அரசியல்வாதி.

மிக உறுதியான நிர்வாகி.

இத்தகைய அம்சங்கள் மூலமாகவே இந்திய அரசியலை அவரால் திறம்படக் கையாள முடிந்தது.

திருமதி காந்தியே இந்தியா



வில் உள்நாட்டு கொள்கை மூலம் உறுதியான அரசாங்கத்துக்கும், அதேவேளை வெளிவிவகார விடயங்களில் அணிசேராக் கொள்கைக்கும் புத்துயிர் அளித்தார்.

இந்தியா தற்போது பெருமளவில் மாறிவருகின்றது. முன்னைய இந்தியாவில் வறுமை மோசமாக இருந்தது. குடித்தொகை விரைந்து அதிகரித்து வந்தது. கலவரங்களும் பெருமளவில் காணப்பட்டன.

### இந்திராவின் இந்தியா

அண்மைக் காலங்களில் இந்தியா குறிப்பிடத்தக்களவு வெற்றிகளைப் பெற்றுள்ளது. சுயதேவைப் பூர்த்தியை உணவுப் பொருட்களில் அடைந்து வருகின்றது. அத்துடன் 'எலக்ரோனிக்' (Electronics) தொழில் நுட்பத்திலும், முன்னேற்றமடைந்து உலகின் ஒன்பதாவது கைத்தொழில் நாடாக அது விளங்குகின்றது. இவை மட்டுமல்ல அணுசக்தியை பெருமளவில் உபயோகிக்கும் ஒரு நாடாகவும் அது இருக்கின்றது.

இந்தியாவின் பத்துலட்சம் (One Million) ஆயுதப்



படைகளும் மிக நவீனமானவை. காலத்துக்கேற்ற பயிற்சிகளையும் அவை பெற்றுள்ளன.

இத்தகைய நவீன வளர்ச்சிகள் இந்திராவின் இந்தியாவை பாரம்பரியமான பழையமுறைகளிலிருந்து மாற்றியமைத்துள்ளன.

புவியியல் ரீதியாகவும், வரலாற்றுரீதியாகவும் இந்தியாவின் அயல் நாடாக இலங்கை அமைந்துள்ளது ஆகவே இந்தியா மாறிச் செல்லும் போது நாமும் அதற்கமை எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

தற்போது அரசியலில் பயங்கரவாதம் ஊடுருவியுள்ளது. இத்தாலிய முன்னாள் பிரதமர் திரு. அல்டோமோரோ எகிப்திய ஜனாதிபதி அன்வர்சதாத்

(11-ம் பக்கம் பார்க்க)

# 'பட்ஜெட் பிற்குறிப்பு

''காலமறிந்து நடக்காதவன் கோலமறிந்து குரங்காவான்'' என்பது நாடோடிப் பழமொழி.

காலமறிந்து நடப்பவன், நாட்டுமக்களால் புகழப்படுவான். நல்லவர்கள் நட்பைப்பெறுவான் பொறுப்போடு வாழ்ந்து நாட்டுக்கு பொன்றாப் புகழைப்பெற்றுக்கொடுப்பான்.

இன்றைய பட்ஜெட்டில் நிறைந்திருக்கும் குறைகளை கழுவித் தள்ளவந்த நாட்டின் நெருக்கடி மக்களைத் திசைதிருப்பும் வழியில் பயன்படுத்துவது காலமறிந்து நடக்கமுடியாத பெருங்குறையைப் புலப்படுத்துகிறது.

அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஒரு தாய் தனது ஐந்து மக்களை இழந்துவிட்டாள் அவர்கள் ஐந்து பேரும் அமெரிக்க ஜனாதிபதி லிங்கனுக்கு எதிரான படையில் போர்புரிந்தவர்கள்.

வெள்ளைமாளிகையில் வீற்றிருந்து அமெரிக்காவை ஆண்ட ஆபிரகாம் லிங்கன் விடுதலை என்ற கோட்பாட்டைக்கொண்டே இந்த அருமந்த உயிர்கள் அழிந்துவிட்டன என்ற பெரு எண்ணத்துடன் நட்பை வளர்க்க அவர்களின் தாய்க்கு ஒருபொறுப்பான உருக்கமான கடிதம் எழுதினான்.

''எனக்கு மாறான கருத்தானாலும் உயிர்த்தியாகத்திற்குச் சிறு இரக்கத்தைக்கூடத் தெரிவிக்காவிட்டால் என்மனம் ஆறுதலடையாது'' என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறான்.

எதிரிகளையும் இவ்வகையில் வென்றெடுத்த லிங்கனுக்கு எதிரிகள் இருந்தபடியால் ஈற்றில் சுட்டுக் கொல்லப்பட்டான்; அது வேறுவிடயம். அமெரிக்க தேசத்தை ஒற்றுமைப்படுத்திய சிவில் போரில் வெற்றி கண்டதற்கு பொறுப்பும் நட்பும் பெரும் பண்புகளாக உதவின.

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5

"உன்னுடைய அழகிற்கும் கெட்டிக்காரத் தனத்துக்கும் ஏ. டி. நல்லமதிப்பளிக்கிறார்" - மிஸிஸ் சிவசம்பு கலாவிடம் பேச்சுவாக்கில் கூறினாள். அந்தக் கருத்து கலாவின் அடி மனத்தில் நன்றாக வேரூன்றி விட்டது.

கலாவின் அனுபவமின்மை அவளையறியாமல் அவளில் வெளிப்பட்டது.

காதல் போதை மருந்து போன்றது. தன் இதயஉணர்வுகளை-தான் கொண்ட காதலை-இலேசில் வெளிக்காட்டமாட்டாள். ஆனால் காதல்உணர்வு அதிகரிக்க அதிகரிக்க, போதை மருந்து உண்டநிலைக்கு ஆளாகுகிறாள்!

கலா பிரேமகாந்தனை நெஞ்சாரக் காதலிக்கின்றாள். அவன் தனது நேசத்தை, உறவை நாடுகிறான் என்று அறிந்த பின் அவளது எதிர்பார்ப்புகள் அதிகமாகிவிட்டது

இயற்கையிலேயே சுறுசுறுப்பான கலா தன் அலுவலகப் பணிகளை மிகத்திறமையாகப் பழகிக் கொண்டதில் வியப்பில்லை. எஸ் ஏ கூட ஒருநாள் "மிஸ் சின்னத்தம்பி இவ்வளவு கெதியிலை அலுவல்களை 'பிக்அப்' பண்ணிவிட்டீர்கள்" என்று புகழ்ந்தார் ஒய்வுநேரங்களில 'ரைப்' அடிக்கவும்பழகி விட்டாள்.

"போகிற போக்கைப்பார்த்தால், மிஸ் சின்னத்தம்பி என்னுடைய இடத்தைப்பிடிச்சு விடுவா போலே கிடக்கு!" என்று டைபிஸ்ட் பரமசிவம் கேலியாகக் கூறுவது வழக்கமாகிவிட்டது.

தன் அழகைப் பிரேமகாந்தன் ரசிக்கின்றான், தன் திறமையை மதிக்கின்றான் என்ற எண்ணம் தோன்றும்போது மனதுக்கு அவளையறியாமல் ஒரு சுகத்தை அது ஏற்படுத்தியதைக் கலா உணர்ந்தாள். அந்தச் சுகத்தில் மேலும் மேலும் திளைக்க மனம் விரும்பியது. ஏன ஒருவித வெறியே கொண்டது.

அந்த வெறி அதிகரிக்க அவளின் போக்கில் பல மாறுதல்கள்!

முன்னரைவிட ஆடை அலங்காரங்களில் தீவிர அக்கறை காட்டினாள்.

தன் அழகை விரும்பியே பிரேமகாந்தன் தன் மீது பிரேமை கொண்டுள்ளான் என்று தன்னுள் மானசீகமாகத் தன்னைப்பற்றி- தன் எழிலைப் பற்றிக் கர்வப்பட்டாள்!

"ரோஸா மலர் மனிதரைத் தேடிப்போகாது. மனிதர்தான் ரோஸாவைத் தேடிப்போக வேண்டும்!"- இப்படி கலா ஒருநாள் பேச்சுவாக்கில் மிஸிஸ் சிவசம்புவிடம் கூறினாள்.

தான் அழகாய்இருப்பதால் பிரேமகாந்தன் இல்லாத சமயங்களில் அலுவலகத்தில் உள்ள மற்ற ஆண்கள் சகஜமாக உரையாட வருகிறார்கள் என்று நினைத்துக்கொள்வாள்.

அவளுள் ஒரு வெறும் வறட்டுத்தனமான நம்பிக்கை!

சம்பளப் பட்டியல் தயாரிக்கும் ராமநாதன் கலாவிடம் சில சமயங்களில் அருகில் வந்து பேசிக்கொண்டு நிற்பான. ஆனால கலா சடாரென்று ஒதுங்கி விடுவாள்.

இந்த ஆம்பிளையள் ஒருத்தி வடிவு எண்டு கண்டால் சுத்திச்சுத்தி வளைவான்கள்!" - மிஸிஸ் சிவசம்புவுடன் கதைக்கும்போது ஒருநாள் இப்படிக் கூறினாள் கலா.

"கலா நீ நினைக்கிற மாதிரி எல்லா ஆண்களும் அப்படி இல்லை..."

"ராஜேஸ் நான் ஒத்துக் கொள்ளமாட்டன்! உனக்குத் தெரியும்தானே, கம்பசில் அந்தத் திருமலைப்பெடியன் தம்பிராசா என்னை 'சைட்' அடிக்கப் பட்டபாடு..."

"நீ தான் ஆர்ட்ஸ் பெடியனை ஏறிட்டுப்பார்க்கமாட்டியே...! உனக்கு மெடிக்கல் பெடியன் எண்டால் சிநேகிதம் வைக்க ஆசை! அது எனக்குத் தெரியும்தானே!',

"எனக்கென்னவோ என்னிலும் பார்க்க அந்தஸ்துக்கூடிய ஒருவனைத்தான் என்மனம் விரும்பியது. அதுஎன்னுடைய பிழை இல்லையே...?"

"கலா, உனக்கு அனுபவம் காணாதடி...! நீ செக்ஸ் எண்டால என்னவென்று இன்னும் வடிவாய்ப் புரிந்துகொள்ள வில்லை...!"

"செக்ஸ் எண்டால் என்னவென்று ஆராய்ச்சி செய்ய நான் தயாரில்லை! ஆனால் அழகில்லாமல் செக்ஸ் இல்லை..!"

"கலா, அழகுதான் செக்ஸின் ஆதாரம் என்றால் அது வீண்விவாதம்! கம்பசில் தம்பிராஜா அழகில்லை. அவன் கறுப்பு நிறமென்று அவனை நீ ஒதுக்கிவிட்டாய்! ஆனால் அவனது வாழ்க்கை உன்னோடு முடிவடையவில்லை! இண்டைக்கு அவனது சமூகஅந்தஸ்து உனக்குத் தெரியாவிட்டாலும் அது எனக்குத் தெரியும்! அவனை நீ அன்று, ஏற்றிருந்தால் இண்டைக்கு உன் அந்தஸ்தும் உயர்ந்திருக்கும்! வாழ்க்கையும் இளமையுடன் இனித்திருக்கும்!"

"நீ ஏன் அந்தக்குப்பையை இப்ப கிளறுகிறாய்? நீ என்னதான் சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டன்!"-கலா ஆக்ரோஷமாகக் கூறினாள்.

"சரிசரி, நான் பேச்சுக்குச் சொன்னேன். கோபிக்காதயடி !"-மிஸிஸ்சிவசம்பு கலாவைச் சமாதானப்படுத்தினாள்.

அன்று பிரேமகாந்தன் ஒரு புது உற்சாகத்துடன் செயல்பட்டான். வழக்கத்துக்கு மாறாக அவனது ஆடை அலங்காரங்கள் வெகு நேர்த்தியாக இருந்தன. வழக்கமாக அவன் அலுவலகத்துக்குக் காரைப் பாவிப்பது குறைவு ஆனால் அன்று காரில் வந்திருந்தான்.

பெண்கள் பணியகம் நடாத்தும் பயிற்சி வகுப்பில் இன்று இறுதிநாள். 'நீங்கள் இன்று கட்டாயம் வரவேணும் சேர்... ஒரு சிறப்புரை ஆற்றவேணும்' என்று திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்தும் உதவி அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்திருந்தபடியால் அதை அவன் ஏற்றிருந்தான்

அழைப்பு மணி ஒலித்தது.

"கலாம்மா... வரட்டாம்...!"- கோபாலு வெகு பவ்வியமாகக் கூறினான்.

அடிக்கடி கோபாலு ஏதாவது ஒரு அலுவலைச் சொல்லிக்கொண்டே கலாவின் மேசைக்கருகில் வந்து கதைத்துக் கொண்டு நிற்பான்.

'எங்கை அம்மாஉந்தச்சேலை எடுத்தனீங்கள்...?"

"இண்டைக்கு உங்களைப் பார்க்க ஒரு புது ஆளாய்த் தெரியுது...!"

இப்படி ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கதையோடு வருவான்.

"ஓகோ இவனும்தன்அழகை ரசிக்கின்றானே..." - கலாவின் மனதில் ஒரு அலட்சியமான திருப்தி.

"அம்மா, இந்தாங்கோ வாரமலர்..."-ஒவ்வொரு கிழமையும் புதுப்பொலிவுடன் வாரமலர் சஞ்சிகையை கோபாலு நீட்டுவான்; கலாவும் வாங்கிப் பார்த்துவிட்டுக் கொடுப்பாள்.

"நீங்கள் வேணுமெண்டால் வீட்டை கொண்டுபோய்ப் பார்த்துப்போட்டு கொண்டு வாங்கோ..." வெகுதாராளமாகக் கோபாலு கூறுவான்.

"நீ ஒழுங்காய் வாரமலர் எடுக்கிறாய் போலை கிடக்கு..." -ஒருநாள் கலா கேட்டாள்.

"முந்தியில்லை... இப்பகிட்டடியிலை தான். -கோபாலு அசட்டுச்சிரிப்புடன் நெளிந்தான்.

ஒருவாரத்துக்கு முந்தி ஒரு கடுதாசியில் சுற்றி ஒரு பார்சலைபைல் கவருக்குள்வைத்துக் கொண்டு, மதிய உணவு இடைவேளையின் போது கலாவிடம் கொடுத்தான் கோபால்.

"என்ன கோபால்... உதென்ன..."

"பார்சலை விரிச்சுப் பாருங்கோவன் உங்களுக்குத் தான்..."

"எனக்கோ..."- கலா நிதானமாகப் பார்சலைப் பிரித்தாள். உள்ளே புத்தம் புதிய பிறேசியர் ஒன்று!- கலாவின் முகம் இருந்தாற்போல் மாறியது.

"கோபாலு, இஞ்சை வா! இதென்ன வேலை..." கலாவின் குரலில் கோபம் தெறித்தது.

"இல்லை அம்மா... உங்களுக்குத்தான்..."- கோபாலு கைகளை பின்னியபடி சிரித்தான்.

ஒரு வெறி வந்தது போலை, பார்சலைத் தூக்கி எறிந்தாள் கலா.

"கொண்டு போடா...!"

பார்சல் கோபாலுவின் முகத்தில் போய் விழுந்தது. அவன் முகம் பயத்தால வெளிறிப்போனது.

"கலாம்மா... கோபிக்காதேயுங்கோ... ஏடிக்கு சொல்லிப் போடாதேயுங்கோ..."

"வாயை மூடிக்கொண்டு போ..." கலா இருக்கையை விட்டு எழுந்து விட்டாள்.

பார்சலைத்தூக்கிகலா எறிந்ததையும் அவள் கோபத்துடன் ஏசியதையும் ஜீப் சாரதி இரத்தினம் தற்செயலாக அவ்விடத்துக்கு வந்தவன் கவனித்து விட்டான்!

கலா இதை மறந்து விட்டாள். ஆனால் கோபாலுமுகத்தில் பிரேதக்களையுடன் திரிந்தான் எங்கே பிரேமகாந்தனிடம் கலா நடந்ததைச் சொல்லி விடுவாளோ என்று கிலி கொண்டிருந்தான். முன்பு போல், பல்லை இளித்துக் கொண்டு கலாவின் மேசையடிக்கு இப்போ அவன் வருவதில்லை. வாரமலர் சஞ்சிகை 'சப்ளை'யும் நின்றுவிட்டது. அவளிடம்பேசும்போது மிக ஜாக்கிரதையாகவும்மரியாதையாகவும் நடக்க ஆரம்பித்தான்.

(வளரும்)

# தொடர் நவீனம்

## ஹங்கேரியில் தமிழிலக்கியப் பெருமை

டாக்டர் ஸ்ட்வான் மேஜர் என்ற ஹங்கேரிய நாட்டுக்காரர் தமிழ் மொழியின் தொன்மையான இலக்கியங்களை ஹங்கேரிய மொழியில் பெயர்த்து வெளியிட்டுள்ளார். இந்த இலக்கியத் தொகுப்பு அந்நாட்டில் வெளியிடப்பட்ட மூன்று தினங்களுள் அனைத்துப் பிரதிகளும் விற்பனையானதால் பெருகிவரும் தேவையைச் சமாளிக்க இந்த நூல் இருமுறை அச்சிடப்பட்டது இதில் மகாகவி பாரதியாரின் பல பாடல்களும் மொழிபெயர்க்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன. சென்றவருடம் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பு நூலாக இது தேர்ந்தெடுக்கப்பட்டுப்பரிசளிக்கப்பட்டுள்ளது.


நன்றி: 'முத்தாரம்'

விமான டிக்கட்டுக்களை மலிவாகப் பெறுவதற்கும்
பிரான்ஸ் ஜேர்மனி
மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான
பிரயாண ஒழுங்குகளை செய்வதற்கும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்
TET
ரான்ஸ் யூரே ரவல்ஸ்
தொடர்பு: திரு. மகேந்திரராஜா,
ரான்ஸ் யூரே ரவல்ஸ் இல. 6, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

# நிழலின் கீழ் வெய்யில் வராது



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

தியேட்டர் வாசலில் முன்னரைப் போல சனங்கள் கும்பலாக இல்லை. ரீவியும் டெக்கும்தான் காரணம் அல்ல. யாழ்ப்பாணத்துத் தற்போதைய சூழ்நிலையும் சனங்களை உதிரிகளாக்கிவிட்டது.

இன்னமும் டிக்கட் வழங்கத் தொடங்காதது சிவநேசனுக்கு சங்கடத்தைக் கொடுத்தது. பக்கத்தில் நின்ற சுவர்ணு, ''எனக்குப் பயமாக இருக்கு'' என்று நெளிந்துகொண்டிருந்தாள்

''ஏன்?''

''யாராவது கண்டால் பிரச்சனை. பிறகு கதை வீட்டை போயிடும்''- அவள் சொல்லும்போதே முகம் அடைந்த மாற்றத்தைச் சிவநேசன் ரசித்தான்.

தலையை நிமிர்த்திப் பார்த்தபோது தியேட்டரின் முன்புறத்தில் கட்டப்பட்டிருந்த பானரில் திரைக்கதாநாயகன், கதாநாயகியின் இடுப்பை வளைத்துக்கொண்டிருந்தான்.

''நீர் எப்பவாவது இப்பிடித் தொட விட்டிருக்கிறீரே'' என சிரித்துக்கொண்டு அவன் கேட்டபோது, ''சீ... என்ன கதை கதைக்கிறியள்'' என்று அவள் முகம் சிவக்கப் பதில் சொன்னாள்,

சிவநேசன் வழக்கமாகவே சந்தோஷமான ஆள். இன்றைக்கு அது பல மடங்காகப் பெருகி இருந்தது. சுவர்ணு கூட நிற்பதாலோ தெரியாது.

டிக்கட் எடுத்து பின்வரிசையில் ஓரமான போது— ''எல்லோரும் இஞ்சைதான் பாக்கிறுங்கள்'' என்றாள் சுவர்ணு.

''அதுக்கென்ன நல்லாய்ப் பார்க்கட்டும். படம் தொடங்க எங்கை பார்ப்பினம்'' எனச் சொல்லிச்சிரித்தான் சிவநேசன்

''உங்களுக்கென்ன எல்லாத்துக்கும் சிரியுங்கோ. எனக்குத்தான் விசராய் இருக்கு.''

சரிசரி கோபப்படாதேயும். படம் தொடங்க எல்லாப்பிரச்சினையும் தீர்ந்திடும்.

படம் தொடங்க சுவர்ணு படத்துடன் ஆழ்ந்துபோனாள். அவன் நெருங்கிய போதெல்லாம் அவள் முறைக்க...

''நீர் சரியான ஆள் கொஞ்சம் தன்னும் இரக்கமில்லை''- படம் முடிந்து வெளியேவந்தபோது அவன் சொன்னான்.

''என்னத்திறகு?''

''உமக்குத் தெரியாதே'' -என்று சொல்லிச் சிரிக்க-

''சும்மா எல்லாத்துக்கும் சிரியாதேங்கோ''.

''சிரியாமல் என்ன செய்யிறது. அதுதானே நல்லது. எனக்கு அழுகிற ஆட்களைப் பிடிக்காது என்று உமக்குத் தெரியும் தானே?''

சுவர்ணுவை வழி அனுப்பி வைத்துவிட்டு அவன் வீடு வந்து சேர்ந்தபோது மத்தியானம் இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

பஸ்ஸில் வந்து இறங்கிய போதே பறைமேளச் சத்தம் அமளியாகக் கேட்டது. ஒழுங்கை வழியாக நடந்தபோது சத்தம் காதைப்பிளக்க ஆரம்பித்தது.

அந்த ஒழுங்கையில் கடைசி வீட்டுக்காரரான சண்முகம் பிள்ளை நேற்றிரவு காலமாகிவிட்டார். அவன் இரவு கொஞ்சநேரம் போய் நின்றுவிட்டுக் காலையிலும் போனான்.

வீட்டில் அவன் அம்மா அவனுக்காகக் காத்திருந்தாள்.

''இவ்வளவு நேரமும் என்னடாப்பா செய்தனீ?''

''ஏன்?''

''செத்தவீட்டை போறேல்லையே. நான் இவ்வளவு நேரம் அங்கைதான் நின்று போட்டுக் கொஞ்சம் தேத்தண்ணி குடிப்பம் எண்டு வந்தனான்.''

''ஐயா, அண்ணை, தம்பி எல்லோரும் அங்கைதானே நிற்கினம்?''

''ஓமடாப்பா. அவை நிற்கினம்தான். ஆனால் அயலுக்க எல்லோரும் போகத்தானே வேணும். நீ இஞ்சை நின்று கொண்டு போகாட்டிலும் சரியில்லை. நான் போறன். கோப்பியைக் குடிச்சிட்டுக் கெதியாய்வா. பிறகு முழுகிப்போட்டு வந்து சாப்பிடலாம். இப்ப மூன்று மணிக்கு எடுக்கப்போயினம்'.

''நான் நேற்றும்காலமையும் போனனான் தானே. இப்ப என்னத்திற்கு ...ரவுணுக்குப் போய்க்களைச்சுப்போய் வாறன் சாப்பிட்டிட்டுப் படுக்கலாம் என்றால்...''

''டேய் மடக்கதை கதைக்காதை. எந்த நாளும் போகப்போறியே? வந்துபார், அந்தாளின்ரை பிள்ளையள் படுகிற பாட்டை கத்திக்குளறி எல்லாம் சுயநினைவு இல்லாமல் இருக்குதுகள். பார்த்துக் கொண்டிருக்க எங்களுக்கே குளறி அழவேணும் போல கிடக்கு.''

''சாகிறது புதினமே? உலகத்திலை பிறக்கிற எல்லாரும் எப்பவாவது ஒரு நாளைக்குச் சாகிறது தானே...''

''எட விசரா என்ன கதை கதைக்கிறாய்? இப்ப ஏன் தேவையில்லாத சதையளை... நான் போறன் கெதியாய்வா''

''கட்டாயம் வரவேணுமே'' என்று கேட்ட சிவநேசனை அவன் தாயார் கோபத்துடன் பார்த்தாள்.

அந்தக் கோபத்துடனேயே திரும்பிப்பார்க்காமல்போனாள். கேற்றடிவரை போனவள் ''நீ சின்னப்பிள்ளை இல்லை என்னவோ உன்ரை மனச்சாட்சிப் படி நடந்துகொள்'' என்று சொல்லிவிட்டு விரைவாக ஒழுங்கையில்இறங்கினாள் தாய்.

சிவநேசன் வீட்டுக்குள் போனான். தாய் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளாலும் அவளது கோபமான பார்வையின் வெம்மையினாலும் சிறிது மனக்குழப்பம் அடைந்து பின்னர் தானே சமாதானம் ஆகி செத்த வீட்டை போய்க் கொஞ்சநேரம் நிற்பம் என்று நினைத்துக்கொண்டு கோப்பி குடிக்க குசினிக்குள்போனான்.

அவன் தங்கை போட்டுக் கொடுத்த கோப்பியைக் குடித்துவிட்டு வீட்டின் பின்பக்கம் போய்ச் சுவர் ஓரமாக மரக் குற்றியின் மேல் இருந்து கள்ளமாக சிகரெட் ஒன்றைப் புகைத்து. புகையால் மனத்தையும் உடம்பையும் சூடாக்கிக்கொண்டுசெத்தவீட்டுக்கும் புறப்பட்டான்

பிரேதப்பெட்டியினுள் அடங்கிக்கிடந்த சண்முகம் பிள்ளையின் வீட்டில் கொஞ்சக் காலத்திற்கு முன்னர் அமளியாக நடந்த அரசியல் கூட்டங்களுக்கு வந்த சனங்களைப் போல, சனங்கள் சேர்ந்திருந்தார்கள்.

ஐயர் வந்து கிருத்தியங்கள் நடந்துகொண்டிருந்தன. பிரேதப்பெட்டியைச் சுற்றிப்பெண்கள் பலர்சத்தம் இல்லாமலும் சத்தத்துடனும் அழுது கொண்டிருக்க அவர்களைப் பலர் வேடிக்கைபார்க்க, சிவநேசனும் பார்த்தான்.

சண்முகம் பிள்ளையின் பிள்ளைகள் அநேகமாக எல்லோரும் பெரியபிள்ளைகள் ஒன்றாக வேதனைப்பட்டு கண்களில் கண்ணீர் பெருக விம்மியவாறு காணப்பட்டனர்.

அழுதுகொண்டிருந்த பெண்களைப் பார்க்கச் சிவநேசனுக்கு வேடிக்கையாக இருந்தது.

''எல்லாப்பெண்களும் ஒரே மாதிரியான பாவனையுடன் அழுகிறார்களே'' என்று பக்கத்தில் நின்றநண்பனிடம் சொன்னான்.

''செத்தவீடு என்றால் அப்பிடித்தானே'' என்றான் நண்பன்.

''சிலபேரின்ரை அழுகையைப் பார்த்தால் சிரிப்பாக இருக்கும். அங்கை பார் அந்த மனிசியை, முகம்படுகிற பாட்டை''

''டேய் அது சண்முகம்பிள்ளையின்ரை சகோதரியடா.''

''அதுக்கு இப்பிடி அழ வேணுமே. மனிசியைப்பார்க்கச் சிரிப்பாய் இருக்கு''

''மனிசி அழுதால் உனக்கு என்ன?''

''இல்லை சண்முகம்பிள்ளைக்கு வயது எண்பதுக்குக்கிட்ட இருக்கும் [illegible] அவர் உயிரோடை இருந்து என்னசெய்யப்போறார் பிறந்து இவ்வளவுகாலமும் சந்தோஷமாய்ச் சீவிச்சு வாழ்ந்த மனிசன் வயதுபோய் முதுமையிலை தானே செத்துப்போச்சு?''

''ம்......''

''பிறகேன்இப்படிஅழுவான் என்றுதான் கேட்கிறன்''

''உன்ரை கதைக்குப் பதில் சொல்லேலாது''

''சில உண்மைகள் இப்படித்தான் சொன்னால் கசக்கத்தான் செய்யும். சில ஆட்கள் செத்தவீட்டுக்கு வாற சனத்திற்குக் காட்டுறதுக்குத்தான் அழுவது வழக்கம்''

''நீ உப்பிடிச் சொல்லுறது பிழை''

''அழுதாப்போல என்ன நடக்கும்' என்று சிவநேசன் சொல்லும் போதே கிருத்தியங்கள் முடிந்து பிரேதப்பெட்டியை மூடும் நிலைக்கு வந்து விட்டார்கள்.

அந்தச் சமயத்தில் பிரேதப் பெட்டி இருந்த தட்டிப்பந்தலில் பெரும் அமளி உண்டானது. கடைசியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் என்பதால் பெரிதாகக் குளறிக்கொண்டு பெண்கள் அழுதார்கள்.

சண்முகம் பிள்ளையின் மகன்களில் ஒருவன் தரையில் விழுந்து புரண்டு...

''ஐயா - ஐயோ - ஐயா' என்று அழ, கூட நின்றவர்கள் அவனைத்தூக்க முயற்சித்தனர்.

''சீ, என்ன ஆம்பிள்ளை பொம்பிளையள் மாதிரி அழுகிறான் என்ன வேதினை எண்டாலும் ஆம்பிள்ளையள் அழலாமா?'' என நண்பனிடம் சொல்வதற்கும் சிவநேசன் நினைத்தான். ஆனால் பக்கத்தில் அவன் இல்லை.

பிரேத ஊர்வலம் புறப்பட்டு ஒழுங்கையில் இறங்க இவனும் கடைசி ஆளாய் ஊர்வலத்தில் சேர்ந்தான்.

ஊர்வலம் அவன் வீட்டைத் தாண்டிய பிறகு அவன் ஓசைப்படாமல் கேற்றைத் திறந்து கொண்டு தங்கள் வளவுக்குள் நுழைந்தான்.

முழுகிச் சாப்பிட்டுவிட்டு வழக்கம்போல சிகரெட்டை எடுத்துக்கொண்டு ரகசியமாக வீட்டின் பின்பக்கம் வந்தபோது—

வெளிக்கேற்றடியில் சைக்கிள் மணியோசை கேட்டது. அதனைத் தொடர்ந்து—

''அண்ணை யாரோ தேடினம்'' எனத் தங்கை வந்து சொன்னாள்.

சிகரெட் புகைக்க முடியவில்லையே என்று மனத்துக்குள் சலித்துக்கொண்டு கேற்றடிக்கு வர சைக்கிளுடன் கணேசன் நின்றான்.

கணேசன் சுவர்ணுவின் வீட்டுக்கு மூன்று வீடு தள்ளி இருப்பவன். தருணத்தில் சுவர்ணுவைச் சந்திக்க அவசரமான செய்திகளை இருபக்கமும் சொல்ல பல விதங்களிலும் உதவிசெய்பவன்.

அது காரணமாகக் கணேசனைக் கண்டதும் வியப்பாக இருந்தது.

''என்ன மச்சான்...''

''இஞ்சை கிட்டவா...''

''என்ன ..''

''ஒரு அவசர அலுவல், என்னோடை வாறியே? இப்ப வர வேணும்''

''என்னடாப்பா, என்ன அலுவல்?''

''வெளிக்கிட்டு வாவன், சொல்லுறன்''

சிவநேசன் கணேசனை உன்னிப்பாகப் பார்த்தான். அவன் முகத்தில் எதையும் கண்டு பிடிககமுடியவில்லை.

''நீ வந்து இரன், வெளிக்கிட்டு வாறன்.''

''மினக்கெட நேரமில்லை. நீ கெதியாய் வா'' எனக் கணேசன் துரிதப்படுத்தினான்.

மிகவிரைவாக வெளிக்கிட்டு வந்தபோது கணேசன் தயாராக இருந்தான்.

''மச்சான் சாப்பிட்டுட்டு சிகரெட் குடிக்கேல்லை. சந்திக் கடையடியில ஒரு தம் அடிச்சிட்டுப்போவம்''.

''என்னடாப்பா நீ, அவசரமான அலுவலென்று சொல்லுறன். ''

சரி வேண்டாம் போவம்.

சிறிதுநேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

''என்ன பிரச்சினை என்று சொல்லன்டாப்பா'' எனச் சிவநேசன் கேட்க—

''ஒன்றும் இல்லை...''என்று இழுத்தடித்து விஷயத்தைச் சொல்ல, சிவநேசனுக்குப்பகீர் என்றது. உடம்பில் நடுக்கம் ஏற்பட்டது.

''கார் பிடி மச்சான்... உடனே பார்க்கவேணும்'' என்றான்.

''பொறு கலவரப்படாதை. சந்திக்கடைச் சிவலிங்கத்திட்டை மோட்டர் பைக்கிற்குச் சொல்லிப்போட்டு வந்தனான், அதில போவம்''.

மோட்டார்சைக்கிளில் ஆஸ்பத்திரிக்குவந்தபோது இடைப்பட்டநேரமாகையால் உள்ளே போகமுடியவில்லை.

உள்ளே போனாலும் சுவர்ணுவைப் பார்க்க முடியாது. தாய், தகப்பன், அண்ணன், தம்பி எல்லோரும் நிற்பார்கள்.

எந்த ரீதியில் அவளைப்பார்ப்பது? தான் உள்ளே போனாலோ, தன்னை அவர்கள் கண்டாலோ உண்டாகும் விளைவுகளை நினைத்துக்கூடப் பார்க்க அவனால் முடியவில்லை;

சில மணித்தியாலங்களுக்கு முன்னர் முகம்மலரச்சிரித்துச் சிரித்துத் தன்னை மயக்கிக் கொண்டிருந்த சுவர்ணு, தன் உயிரைவிடத் தான்-நேசிக்கும் சுவர்ணு இப்ப

யோசித்துப் பார்க்கப்பார்க்கச் சிவநேசனால் நிலைகொள்ள முடியவில்லை. ஆஸ்பத்திரி வாசலில் ஒரு இடத்தில் நிற்கமுடியாமல் தவித்து மனம் பரிதவிக்க, உடல் பதற...

''மச்சான் நீ இதில நில் நான் உள்ளுக்க போய்ப்பார்த்திட்டுவாறன்'' என்றுசொல்லிவிட்டுக் கணேசன் ஆஸ்பத்திரி வாச்சரை ஒரு மாதிரிச்சமாளித்து உள்ளே போக—

சிவநேசன் மனம் துடிக்க ஆரம்பித்தது. சுவர்ணு, சுவர்ணு என உதடுகள்அசைய. அவளைப் பார்க்க முடியவில்லையே என்ற வேதனை நெஞ்சைக்குடைய

அவன்படும் வேதனையை உணர்ந்தோ என்னவோ அங்கு நின்ற சிலர் அவனைப் பார்த்தனர். ஆஸ்பத்திரிசுவர் ஓரமாக போய் நின்று சுவரைப் பிடித்துக்கொண்டு

[8ம் பக்கம் பார்க்க]

## ஓ மனிதர்களே....!


ஆசைகள் ஆயிரம் தோன்றும்—அதை
அடக்கியே வென்றிட வேண்டும்
நீதியின் குரல்சிறைப் பட்டால்
நேர்மை புதைகுழி ஏகும்
ஜாதி உயர்வு தாழ்வென்றே
யார் வகித்தாரிந்த நீதி?
ஓரினம் ஓர்குலம் என்றே
பேரிறை எம்மைப் படைத்தான்

வள்ளுவன் காந்திஜி புத்தர்—பேசு
வார்த்தையின் அர்த்தமும் சொல்லி
பிள்ளையைக் கிள்ளியே தொட்டில்
ஆட்டிடும் ஆட்சியின் மாட்சி
தொல்லைகள் நீங்கிநல் வாழ்வு
தொடர்ந்திட இங்குள யாவும்
நல்ல குடைநிழல் சேரும்
நாளே

— நெடுந்தீவு லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை நாடகம்



# தருமத்தின் குரல்

காரை. செ. சுந்தரம்பிள்ளை

## காட்சி 4

(களம் I)

இடம்: அக்கிரனின் அந்தரங்க அறை
நேரம்; காலை

பாத்திரங்கள்: ஆத்தூர் அரசன் அக்கிரன்
மந்திரி I. மந்திரிII, மந்திரி III

அக்கிரன்:
சுக்கிராச் சாரி கூடத்
தோற்பன் உன்மதிக்கு என்பேன்
திக்கெலாம் இதனைப் பற்றிச்
செப்பிட ஒழுங்கு செய்வோம்;
தக்கநற் பெண்க ளுக்குச்
சன்மானம் உண்டு என்போம்
மக்களுக் கெல்லாம் கற்பே
மாசிலாச் செல்வ மென்போம்
(சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது;
ஒரு பெருமூச்சோடு மீண்டும்...)

அக்கிரன்:
ஒழுக்கமே இல்லேன் என்றும்
உயர்பண்பை அறியே னென்றும்
பழியினைச் செய்வ தன்றிப்
பயனுள்ள புரியே னென்றும்
இழுக்காகப் பேசி என்னை
ஏளனம் செய்வ தாகப்
பலர்சொல்லக் கேட்ட தாலே
பதறுதென் உள்ளம் அன்றோ

மந்திரி: III
இதற்கொரு மார்க்கம் சொல்வேன்
எள்ளள வேனும் நீங்கள்
மதியினை யிழக்க வேண்டாம்
மயங்கியும் நிற்க வேண்டாம்
அதிகாரி யான போதும்
ஆண்டியே யான போதும்
நிதியென ஒழுக்கம் தன்னை
நெஞ்சிலே கொள்க; என்க

எவ்விடம் சென்ற போதும்
எதைப் பேச மறந்திட்டாலும்
திவ்விய ஒழுக்கம் பற்றிச்
செப்பிட மறக்க வேண்டாம்
அவ்வையார் பாட லோடு
அரிய நற்குறளும் சேர்த்துச்
செவ்வையாய் ஐந்தோ பத்துச்
செய்யுள்கள் பாட மாக்கி;

மக்கள்முன் ஒழுக்கம் பற்றி
மழையெனப் பொழிதல் வேண்டும்;
தக்கவன் ஒழுக்கம் உள்ளான்
தலைவனும் ஒழுக்கம் குன்றில்
திக்கெலாம் இகழும் என்றே
தினம்தினம் சொல்லி வந்தால்
ஒக்கஉன் குறைகள் மாயும்
உங்களைப் போற்று வார்கள்

அக்கிரன்:
ஆண்டவன் தனிலே பக்தி
அணுவேனு மில்லா நச்சுப்
பூண்டென என்னைப் பற்றிப்
புவியினர் உரைக்கின் ருராம்
வேண்டிய பணத்தைக் கோயிற்
பொக்கிசத் திருந்தெ டுக்கும்
தீண்டாத பொருளாய் என்னைச்
செகத்தினர் இகழ்கின் ருராம்

மந்திரி: I
அடிக்கடி கோயில் சென்ருல்
அக்குறை தீர்ந்து போகும்
இடைக்கிடை மானி யங்கள்
ஏதேனும் கோயி லுக்குக்
கொடுப்ப தாய்ப்பறை யறைந்தால்
குவலயம் போற்றி நிற்கும்
நடித்திடத் தெரிந்தால் இந்த
ஞாலத்தை வெல்ல லாமே

அத்துடன் பக்தி பற்றி
அவையிலே பேச வேண்டும்
உத்தமத் துறவி மாரின்
உறைவிடம் சென்று காலில்
நித்தமும் வீழ்ந்து போற்றி
நிர்மலன் என்று காட்டில்
இத்தரை மீதில் நீயே
இறைவனின் வாரி சென்பர்

அக்கிரன்;
மெத்தவும் கடினம்; இந்த
வாறுயான் நடித்தல் என்பேன்
இத்தரை மீதில் யார்க்கும்
யான் தலைவணங்க மாட்டேன்
புத்தியைத் தீட்டி ஏதும்
புதியன கூற வேண்டும்
உத்தமன் என்று போற்ற
உபாயங்கள் உரைக்க வேண்டும்

மந்திரி: I
காரியம் தனிலே வெற்றி
கண்டிட வேண்டு மென்ருல்
யாரென்ற போதும் காலில்
வீழ்ந்திடல் தவறே யில்லை
கூரிய மதி படைத்தோர்
கூடவே இந்த வாறு
சீரிய பெரியோர் பாதம்
தீண்டியே வணங்க லுண்டு

அக்கிரன்:
சரிசரி யமைச்சரே யான்
சம்மதிக் கின்றேன்; வேறு
பெரியதோர் சிக்கல் உண்டு
பொறுமையாய்த் தீர்த்தல் வேண்டும்

மந்திரி: I
அரச!உம் ஆணை யாதோ
அதனையாம் சிரமேற் கொள்வோம்
கரிசனை யோடு செய்வோம்
கவலையை விட்டுச் சொல்க

அக்கிரன்:
கடன் பழுவாலே யானும்
கஷ்டங்கள் அடையும் போது
திடமுள்ள சத்திய கீர்த்தி
செலுத்துக கப்பம் என்றென்
னிடம்ஒரு தூது விட்டே
இருக்கிருன்; இவன் பகைத்தால்
நடமாடல் கடினம் இந்த
நாட்டையும் பறித்துக் கொள்வான்

மந்திரி: III
கப்பத்தை அனுப்பும் போது
கள்வர்கள் கொள்ளை யிட்டுத்
தப்பியே சென்ற தாக
தந்திரம் ஒன்று செய்து
ஒப்பிட முதலில் வைப்போம்
ஒருசில தவணை கேட்போம்
அப்புறம் புதிய திட்டம்
அமைத்ததில் வெற்றி கொள்வோம்

அக்கிரன்:
கற்பனை நன்று ஆனல்
காரியம் தோற்கு மென்ருல்
மற்புயச் சத்திய கீர்த்தி
மன்னனின் வாளுக்கே யான்
அற்பவோர் புழுவாய் மாய்வேன்
ஆதலால் இதனைப் பற்றிப்
பொற்புறச் சிந்தை செய்தே
புகலுவீர் உபாயம் ஒன்றே

மந்திரி: III
தயக்கமே வேண்டாம் மன்ன
தாரணி தனிலே உன்னை
இயக்கியே நிற்கும் நாங்கள்
இருக்கையில் அச்ச மேனே
முயற்சியே உடையார் வாழ்வில்
முன்னேறு வார்கள் உங்கள்
உயர்ச்சியே எங்கள் வாழ்வு
உறுதியாய் வெற்றி கொள்வோம்

அக்கிரன்:
அமைச்சர்காள் நன்றி; உங்கள்
அறவுரை மிகவும் நன்று;
சுமையினை இறக்கி என்னைத்
துயரின்றி வாழ வைக்கும்
உமைப் பெற்ற எனக்குத்
துன்பம் என்பதுவருமா? இல்லை
சமைத்த உம்திட்டம் வெற்றி
தந்திட உழைப்போம் நன்கே

[திரை]

(வளரும்)

---

கே. எஸ். சிவகுமாரன் எழுதுவது:

# 'ஆராய்ச்சி' ஆரம்ப இதழ்களில் எனக்குப் பிடித்தவை

மறைந்த பாளையங்கோட்டை அறிஞர் நா. வானமாமலை அவர்கள் 1969 முதல் ஓர்காலாண்டுப்பத்திரிகைநடத்திஞர். 'ஆராய்ச்சி' என்ற அந்தக் காலாண்டு ஏட்டிலே இரண்டாவது இதழை மீண்டும் படித்துப் பார்த்தேன். அதில் சில பகுதிகள் எனக்குப் பிடித்தன பிடித்த அப்பகுதிகள் உங்களுக்கும் பிடிக்கக்கூடும். அதை முன்கூட்டியே படித்திராத நேயர்கள் அவற்றைத் தேடிப்படிக்க இப்பத்தி உதவும் எனக் கருதுகிறேன்.

★

பத்தி எழுத்தாளனுகிய எனக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதவிருப்பமே வருவதில்லை. ஆய்வாளர்கள் எழுதும் 'ஆழமான' கட்டுரைகளை படிப்பதுண்டு. அதே சமயம் பொதுவாசகனுக்கு எழுதுவதனுல் அடிக்குறிப்புக்கள் மேற்கோள்கள் விரிவுரைகள், வியாக்கியானங்கள் சகிதம் 'ஆழமான' பாசாங்கு செய்து எழுத முற்படுவதேயில்லை. பொதுப்படையாகவே பத்தி எழுத்துக்களை எழுத விரும்புபவன். எனவே என்னிடமிருந்து ''ஆழமான'' திறனுய்வுகளை வாசகர்கள் எதிர்பார்ப்பது நியாயமில்லை எனது அபிப்பிராயங்களும், அவதானிப்புக்களும் ஒரு பத்தி எழுத்தாளனின் [கொலமிஸ்ட்] குறிப்புக்கள் என்று மத்திரமே எடுத்துக் கொள்ளவேண்டும்.

★

1969 ஒக்டோபரில் வெளிவந்த 'ஆராய்ச்சி' ஏட்டின் இரண்டாவது இதழிலே எழுதியிருப்பவர்கள் இந்தியாவின் ஆய்வறிவாளர்களில் சிலர் எம். பி. குருசாமி, மயிலை சீனி வெங்கடசாமி, கே. பி அருணுசலம் (அறவாணன்,) கலாநிதி என் சுப்பிரமணியம் எஸ். ஏ டாங்கே, கலாநிதி அமலேந்து குஹ, ஏ. சிவசுப்பிரமணியம், கே. ஜெகநாதன் கலாநிதி எஸ். வி. சுப்பிரமணியம் கலாநிதி எஸ். அகஸ்தியலிங்கம், ஏ.என். சட்டநாதன் நா. வானமாமலை.

மணிமேகலையில் பௌத்தம் சங்ககாலத்து நடுகற்கள், வள்ளுவரின் பொருளியல் கருத்துக்கள், யாளி, பண்டைத் தமிழகத்து மகளிர் நிலை, சங்கச் செய்யுளில் யாப்பு வளர்ச்சி, வினையெச்சங்கள், Tholkappiyars Treatment of Syntax இந்திய வரலாற்றை உருவாக்கும் சக்திகள் இந்திய வரலாறும் மார்க்சியக் கண்ணேட்டமும், வாசற்படி மறியல், சங்கரரும் சநாதனமும், வரலாற்றில் பொருள் முதல் வாதம் ஆகிய கட்டுரைகளும், ''தமிழ் நாவல் இலக்கியம்'', ''தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள்'' ஆகிய புத்தகங்கள் பற்றிய மதிப்புரைகளும் இந்த ஏட்டில் இடம்பெற்றுள்ளன.

ந சுப்பிரமணியம் எழுதிய ''பண்டைத் தமிழகத்து மகளிர் நிலை'' என்ற கட்டுரையிலிருந்து...

''சங்கால சமுதாயத்தில் மகளிர்நிலை ஆடவர் நிலையினும் இழிந்திருந்தது. அம்மகளிரும் இவ்விழிந்த நிலைமையை ஏற்றுக்கொண்டனர். அம்மாற்றத்திற்கான முயற்சிகளை அவர்கள் தற்கால மகளிரைப்போல மேற்கொள்ளவில்லை. ஆடவர்க்கு உட்பட்டுத் தம் சுதந்திரத்தையோ சமத்துவ நிலையையோ போற்ருமல் வாழ்வதே தங்களுக்கு நேரிது, பயனுடையது என்று அவர்கள் கருதினர்போலும்... கொள்கையளவில் ஆடவர்க்கு அடங்கி நிற்கும் நிலையை ஏற்றுக் கொண்ட மகளிர் எங்கும் எந்நாட்டிலும்போல அன்றும்தமிழகத்திலும் ஆடவரைத் தமது ஏவல்கேட்கும் தலைவர்களாக இட்டுக்கொண்டனர் என்பதே உண்மையாகும். சுதந்திரத்திற்கும் பொறுப்பிற்கும் இணைபிரியாத தொடர்பு உண்டு. ஆகவே கொள்கையளவில் சுதந்திரத்தையும் அக்காரணத்தால் பொறுப்பையும் விட்டுக்கொடுத்து உண்மையில் மனையாட்சியைக் கைப்பற்றி நடத்தியவள் பெண் என்பதே வரலாறு''

★

எஸ் ஏ. டாங்கே எழுதிய ''இந்திய வரலாற்றை உருவாக்கும் சக்திகள்'' என்ற கட்டுரையிலிருந்து

''வரலாற்று ஆசிரியனுக்கு மனிதனும் சமூகமுமே கருப் பொருள்களாகின்றன. வரலாற்றை விஞ்ஞானமாக வரலாற்ருசிரியர் கொள்கிருன்... மனிதன் அவனது சமூகத்தின் அவனுடைய முழு வரலாற்றின் வளர்ச்சிப்போக்கில் புரட்சிகரமான பெரும் பங்கு வகித்தது உற்பத்திக் கருவிகள்தான். அவற்றைப் பயன்படுத்துவதில் பெருக்குவதில் உற்பத்திப்பொருள்களைப் பங்கீடு செய்வதில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் உறவுகளில் ஈடுபடுகிருர்கள். உற்பத்திச் சாதனங்களிலும் உற்பத்திச் சக்திகளிலும் மாறுதல்கள் ஏற்படும்போது இந்த உறவுகளும் மாற்றம் பெறுகின்றன உற்பத்திச் சக்திகளின் இந்த மாற்றங்கள் தான் உற்பத்தி உறவுகளுக்கு அடிப்படை. மனிதனின் சமூக வரலாற்றையும் அரசியல், மதசார, அறநெறி, இலக்கிய விஞ்ஞான பிரச்னைகளையும் ஒரு யுகத்திலிருந்து இன்னொரு யுகத்திற்கு இடைப்பட்ட பெயர்ச்சி முறையையும் அது தீர்மானிக்கிறது''

★

அமலேத்து குஹ எழுதிய ''இந்திய வரலாறும் மார்க்சியக் கண்ணேட்டமும்'' என்ற கட்டுரையிலிருந்து...

''இந்தியாவில் உண்மையான நிலப்பிரபுத்துவம் தோன்றவில்லை... இந்திய சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கை ஐரோப்பியச் சொற்களைக்கொண்டே அறியமுயல்வது தவருனதாக இருக்கும்''

இக்கட்டுரை முழுவதிலும் பயனுள்ள பலவிபரங்களைத் தருகிறது அவசியம் படித்துப் பாருங்கள்.

★

ஏ.என். சட்டநாதன் எழுதிய ''சங்கரரும் சநாதனமும்'' என்ற கட்டுரையிலிருந்து...

''பழம் பெருமை பேசுவதால்மட்டுமோ அல்லது பழைய நூல்களைச் சரியாகவோ தவருகவோ வியாக்கியானம் செய்வதால் மட்டுமோ எந்தச் சமுதாயமும் முன்னேறிவிடமுடியாது. அது ஒரு கலை படித்த அறிவாளிகளுக்கு மனச்சாந்தியை அளிக்கலாம்; ஆனுல் பெரும்பான்மையான பாமர மக்கள் இது குறித்து அக்கறையற்றவர்களாகவே இருப்பார்கள். பழமை உபயோகமற்றதாகவும், தீமை விளைவிப்பதாகவும், காலத்துக்கு ஒவ்வாதது ஆகவும் இருக்குமாஞல் புதிய புதிய கொள்கைகளையும் முறைகளையும் நாம்தேடவேண்டும்.

★

மறைந்த ஆய்வாளர் கைலாசபதி காலத்தில் எழுதிய ''தமிழ் நாவலிலக்கியம்'' என்ற நூலிலிருந்து பலமுக்

(8 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாள்ஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் டுவிஸ்ற்

தமிழில்: 'பேனு'

## ஒலிவரின் புதிய நண்பர்கள்

இரவு நேரம் குளிரும் கும்மிருட்டுமாக விருந்தது. ஒலிவர் கதவைச் சாத்திவிட்டு தன்னிடமிருந்த ஒருசில உடுப்புக்களை ஒரு துணியில் சுற்றி கட்டினான். அருகிலிருந்த வாங்கின் மீது அமர்ந்து விடியுமட்டும் காத்திருந்தான். காலைஒளியின் முதல் கீற்று விழுந்தவுடனேயே எழுந்து கதவைத் திறந்து வெளியில் வந்தான். மீண்டும்கதவை முன்போலவே மூடிவிட்டு வீதிக்கு வந்தான்.

காலை எட்டு மணிக்கெல்லாம் அந்த ஊரிலிருந்து 5 மைல் தூரத்தை ஒலிவர் கடந்துவிட்டான்.

கடைசியாக ஒரு மைல்கல்லின் மீது அமர்ந்து, எங்கே போவது எப்படிப் பிழைப்பது என்பது பற்றி முதல்தடவையாக யோசிக்கலானான்.

தான் உட்கார்ந்திருந்த இடத்துக்கும் லண்டன் நகருக்குமிடையில் 70 மைல் தூரமிருக்கின்றது. என்பதை அந்த மைல்கல்லில் எழுதியிருந்ததிலிருந்து புரிந்துகொண்டான்.

லண்டன் நகர்பற்றிய சிந்தனை எழுந்தவுடனேயே அது மிகப்பெரிய நகரம் — அங்கே திரு பம்பிள் வந்தாலும்கூட தன்னைக் கண்டுபிடித்துவிட முடியாது என்று எண்ணிக்கொண்டான். லண்டனுக்குச் சென்றால் எந்த புத்தியுள்ள பையனும் பிழைத்துக்கொள்வான் என்று தொழில்கூடத்தில் முதியவர்கள் பேசிக்கொள்வதைஒலிவர் கேட்டிருக்கிறான். இந்த யோசனை தோன்றியவுடனேயே மீண்டும் எழுந்து நடக்கலானான். அன்றைய தினம் ஒலிவர் 20 மைல் தூரம் நடந்துமுடித்தான். இரவானவுடன் ஒரு புற்றரையை நாடி படுத்து நித்திரையாய்போனான்.

விடிய எழுந்தபோது காலைப்பொழுது மிகவும் குளிராய் இருந்தது. பசி தலையைச் சுற்றியது. கையில் இருந்த ஒரே ஒரு பென்சு காசைக்கொடுத்து ஒரு துண்டு றொட்டியை வாங்கித்தின்றான். இன்னொரு இரவும் கழிந்தது. அடுத்தநாள் பிரயாணத்தை ஆரம்பித்த போது அவனால் நகரக்கூட முடியவில்லை: கிராமங்களில் பிச்சை எடுப்பது தடைசெய்யப்பட்டிருந்தபோதிலும் ஆங்காங்கே கூடியவரை பிச்சை எடுத்து சமாளித்துக்கொண்டு மேலும் ஆறுநாட்களைக்கழித்துவிட்டான். ஏழாம் நாள் காலையில் பார்னட் என்ற ஊரை சென்றடைந்தான் ஒலிவர். கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. மனிதர் எவரும் இன்னும் எழுந்திருக்கவுமில்லை போலும், சூரியன்மாத்திரம் மிகஅழகாக கிழக்கில் எழுந்து வந்து கொண்டிருந்தது.

ஒரு வீட்டின் கதவருகில் ஒலிவர் சிறிதுநேரம் அமர்ந்திருந்தான். கடைகளின் யன்னல்கள் மெதுவாகத்திறக்கத் தொடங்கின. மனிதர்கள் இரண்டொருவர் நடமாட ஆரம்பித்தார்கள். இதேசமயம் சற்று நேரத்துக்குமுன் ஒன்றும் கவனியாதது போல் ஒலிவரைக் கடந்து சென்ற ஒரு பையன் திரும்பி வந்து பாதையின் மறு கரையில் நின்று கொண்டு தன்னை அவதானித்துக் கொண்டிருப்பதை ஒலிவர் கண்டான். சற்றைக்கெல்லாம் அந்தப்பையன் வீதியைக்கடந்துவந்து 'ஹலோ என்ன பிரச்னை?'' என்று ஒலிவரிடம் வினவினான்

அவ்வாறு வினவியவன் ஒலிவரின் வயதளவினன்தான் என்றாலும் இதுவரை ஒலிவர் பார்த்திராத விதத்தில் விசித்திரமாக அவன் தோற்றினான். வயதுக்கேற்ற உயரமில்லாது போனாலும் ஒருவளர்ந்த மனிதனைப் போல் அவன் பாவனை செய்தான். தலையில் அவன் வைத்துக்கொண்டிருந்த தொப்பி இதோ விழுந்துவிடப் போகிறேன் என்று அச்சுறுத்திக் கொண்டிருந்தது. ஒரு பெரிய ஆள் அணியும் கோட் ஒன்றை அவன் அணிந்து கொண்டிருந்தான். அது குதிக்கால் வரை தொங்கிக் கொண்டிருந்தது, கோட்டின் கைகளை மேலே மடித்து விட்டு கால்சட்டைப் பைகளில் கைகளை புகுத்திக் கொண்டிருந்தான். நான்கு அடிகூட உயரமில்லாத அவன் ஏதோ ஒரு பெரிய கனவானைப் போல் ஒலிவர் முன்னின்றுருந்தான்.

''ஹலோ தம்பி, என்ன விஷயம்'' என்று அவன் கேட்டான்.

''எனக்கு மிகவும் பசி; களைப்பாகவும் இருக்கிறது'' என்று கூறினான் ஒலிவர் 'நான் கடந்த ஏழுநாட்களாக நடந்துள்ளேன்'' என்று மேலும் சொன்னான் ஒலிவர்.

'ஏழுநாட்கள் நடந்தாயா;' என்று கேட்டு விட்டு, உனக்கு இப்போ உணவு வேண்டும், நானும்கஷ்டப்பட்டவன் தான் ஆனாலும் என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது. நான் சாப்பாடு வாங்கித் தருகிறேன் என்னுடன்வா''என்று அழைத்தான் புதிய பையன்,

ஒலிவரை கைலாகு கொடுத்து எழுந்திருக்க உதவினான். பின்னர் பக்கத்திலுள்ள கடையொன்றுக்கு அழைத்துச் சென்றான். அங்கு றொட்டி வாங்கிக் கொடுத்தான். பின்னர் குடிப்பதற்கு பியரும் வாங்கிக் கொடுத்தான்.

4

ஒலிவர் சாப்பிட்டு முடிந்த கையோடு; 'லண்டனுக்கா போகிறாய்?'' என்று கேட்டான். புதிய பையன்.

''ஆம்''

''எங்காகிலும் தங்கும் வசதியிருக்கிறதா?

''இல்லை''

''பணம்?''

''இல்லை''

அந்த விசித்திரக் குள்ளன் சட்டைப் பைக்குள் கைகளை நன்றாகத் திணித்துக்கொண்டு விசில் அடித்தான்.

''நீர் லண்டனிலா வசிக்கிறீர்'' என்று ஒலிவர் கேட்டார்.

''ஆம் ஆம், நான் வீட்டிலிருக்கும் போது அங்குதான் வசிக்கிறேன், இன்றிரவு நீ உறங்குவதற்கு ஒரு இடம் வேண்டும் இல்லையா?''

''ஆம், உண்மையில் கிராமத்தை விட்டுவெளியேறியதிலிருந்து இன்னும் ஒரு வீட்டுத் திண்ணையில்கூட படுக்கக் கிடைக்கவில்லை''

''கவலைப்படாதே இன்று இரவு நான் லண்டனில் இருக்க வேண்டும் அங்கே வாழும் ஒரு கௌரவமான கனவானை எனக்குத் தெரியும். அவருக்கு தெரிந்த கனவான்கள் யாரும் அறிமுகப்படுத்தினால் உனக்கு அவர் இலவசமாக தங்குவதற்கு இடமளிப்பார். எனக்கு அவரைத் தெரியும்''

எதிர்பாராத விதமாக இவ்வாறு கிடைக்கும் உதவியை உதறித்தள்ளிவிட ஒலிவருக்கு மனம் வரவில்லை.மேலும் அந்த வயதான பெரிய மனிதர் ஒரு வேலையும் கூட போட்டுத் தருவார் என்று புதிய பையன் கூறியது ஒலிவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது. எனவே அவனுடன் சற்று மனம் விட்டு ஒலிவர் கதைக்கலானான். புதிய நண்பனின் பெயர் ஜெக் டாக்கின்ஸ் என்றும் புரிந்துகொண்டான்.

இரவாகும் வரைக்கும் லண்டன்நகருக்குள் போவதைடாக்கின்ஸ் விரும்பாததால் பகல் பதினொரு மணியளவில் நகரின் அருகாமையைப் போய் அடைந்தார்கள். லணடன் நகரின் மிகவும் அசுத்தமான முடைநாற்றம் வீசும் பகுதிகளைக் கடந்து ஒரு சிறு குன்றின் அடிவாரத்தைச் சென்றடைந்தார்கள். ஒலிவருக்கு அந்தப்பகுதி கொஞ்சமும் பிடிக்கவில்லை ஓடிவிடுவோமா என்று கூட நினைத்தான். ஆனால் டாக்கின்ஸ் அவன் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு வீட்டின் கதவைத் தள்ளித் திறந்து உள்ளே ஒலிவரையும் இழுத்துக்கொண்டு கதவைச் சாத்திக் கொண்டான்.

டாக்கின்ஸ் விசில் அடித்தான். உடனே அந்த வீட்டின் உள்பகுதியில் மெழுகுவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அதைத் தொடர்ந்து ஒரு மனிதனின் முகம் எட்டிப் பார்த்தது-

''நீங்கள் ரெண்டுபேர் இருக்கிறீர்கள்... மற்ற ஆள் யார்? என்று கேட்டான் அந்த மனிதன்.

''ஒரு புது நண்பன்'' என்று பதில் கூறிய டாக்கின்ஸ், ''பேஜின் மேலேஇருக்கிறாரா'' என்று கேட்டான்.

''ஆம் மேலே இருக்கிறார்' அவர் கைக்குட்டைகளை ஆராய்ந்துகொண்டிருக்கிறார் மேலே வாருங்கள்'' என்று கூறியபடி அந்த மனிதன் மறைந்து விட்டான்.

ஒலிவர் இருட்டில்தடுமாறியபடி டாக்கின்ஸின் பின்னால் நடந்து சென்றான். கடைசியில் அங்கிருந்த கதவொன்றைத் திறந்து ஒலிவரையும் தன்பின்னால் அந்த அறைக்குள் இழுத்தான் டாக்கின்ஸ்.

அந்த அறையின்சுவர்களும், பொருட்களும் மிகப்பழையனவாயும் அழுக்குப்படிந்தும் காணப்பட்டன. அங்கே ஒரு மரத்தினாலான மேசை அடுப்பின் முன்னால் கிடந்தது. அதன் மீது ஒருமெழுகுவர்த்தி பியர் போத்தல் ஒன்றில் சொருகிவிடப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. இரண்டொரு கோப்பைகள் ஒரு றொட்டி, பட்டர், ஒரு சாப்பாட்டுக்கோப்பை முதலியவையும் காணப்பட்டன. நெருப்பில் ஏதோ வெந்துகொண்டிருந்தது அதன் அருகில் மிகவும் முதியவனான ஒரு யூதன் நின்றிருந்தான். கொடூரம் நிறைந்த அவனது முகத்தை அடர்த்தியான சிவப்புமயிர் மறைத்துக்கொண்டிருந்தது தொள தொளத்த கம்பிளி கவுன் ஒன்றை அவன் அணிந்திருந்தான். அறையில் கட்டப்பட்டிருந்த ஒரு கயிற்றில் ஏராளமான கைக்குட்டைகள் தொங்கிக்கொண்டிருந்தன. யூதன் அடுப்பில் வைத்திருந்த வறுவல் சட்டியையும் அந்தக் கைக்குட்டைகளையும்

(10-ம் பக்கம் பார்க்க)



# துணைவிக்கு ஒரு கடிதம்

பலநூறு மைல்தூரம்
இப்பால் நான்
இருக்கின்றேன்;

என்னுயிர்த் துணைவி உவள்
தன்னுடைய குழந்தையுடன்
பலநூறு மைல்தூரம்
அப்பால் இருக்கிறாள்:
அவளுக்கு ஒரு கடிதம்
அவசரமாய் எழுதுகின்றேன்
அவசியமாய் இருப்பதனால்
அவளுக்கு எழுதுகின்றேன்!
வெள்ளைப் பசு தந்த
பாலுடனே சோற்றினையும்
தேங்காய்ச் சிரட்டையிலே
போட்டுப் பிசைந்தெடுத்து
ஒக்கலையில் எம்மகனை
இடுக்கிச் சிறு வீட்டின்
முற்றத்தில் நடை பயின்று
சோறூட்டும் வேளையிலே
என்னுடைய இக்கடிதம்
உன் கையில் வந்துவிழும்
பொருத்தமான நேரம் இது

கடிதத்தின் கருத்தை
கருத்தில் இருத்திக்கொள்
பொதுவாகத் தாயார்
தம்முடைய பிள்ளைகட்கு
உணவூட்டும் வேளையிலே
என்ன சொல்லிஊட்டுகிறார்.

உணவூட்டும் வேளையிலே
காக்கைகள் வந்திருக்கும்:
காக்கைகளைக் காட்டி
''கெதியாய்ச் சோற்றைத்
தின்!
காக்காய் பறித்துவிடும்''
என்று மிரட்டிடுவார்:

குழந்தை வாய் திறக்கும்:
சோற்றை ஊட்டிடுவாள்:
அந்த நேரத்தில்தான்

அயல்வீட்டுப் பிள்ளையவன்
அங்கே வந்திருப்பான்:
''அண்ணன் வந்துவிட்டான்
அவனுக்குக் கொடுத்திடு
வேன்

கெதியாய்ச் சோற்றைத்
தின்''

என்று பயம் காட்ட
எந்தன் சிறுபிள்ளை
சோற்றைத் தின்றுவிடும்!
சிந்தியுள்ள சோற்றைக்
கொத்தித் தின்பதற்கு
உணவு தேடி அலைகின்ற
கோழிகள் அங்கு வரும்!
அதனை விரட்டி விட்டுப்
''பிள்ளையின் சோற்றைக்
கோழி கேட்கிறது!
நீ சோற்றைக் கெதியாய்த்
தின்!

இல்லையேல் கொடுத்திடு
வேன்''

என்றவுடன் குழந்தை
'தன்னுணவுபறிபோமோ—
எனும் அச்சம் காரணமோ-
என்னவோ— தின்றுவிடும்!
வீதி வழியாகக்
கூனல் முதுகுடனே
நரைத்த தாடியுடன்
கந்தல் உடையுடனே,
கையிலொரு தடியுடனே
முதுமை வலிந்தணைத்த
கிழவன் போவதனை
எப்போதோ கண்டதனை

இப்போது நினைவூட்டிக்
குழந்தைக்குப் பயமூட்டி
உணவதனை ஊட்டிடுவாள்!
உன்னை வளர்த்தவளும்
என்னை வளர்த்தவளும்-பின்
எப்படித்தான் வளர்த்திருப்
பார்!
இப்படித்தான் வளர்த்திருப்
பார்!

தாயாரும் உணராது
யாரும்தான் அறியாது
குழந்தையின் மனத்தினிலே
போட்டி மனநிலையை
ஊட்டிவிடுகின்றார்!
அச்ச உணர்வுகளை
உணவுடனே தீற்றுகிறார்
அடுத்தவர்க்கும் தன்
பொருளைக்

கொடுக்காத குணமதனைப்
பிஞ்சு மனதினிலே
அறியாது பதிக்கின்றார்!

இதுதான் இரகசியம்!
இதுதான் உண்மைநிலை!
இந்தக் குழந்தை
வளர்ந்து வந்தபின்னர்
என்னென்ன செய்வான்?
என்பதனை எண்ணிப்பார்!
வாழையடி வாழையென
வளர்ந்து வந்த பழக்கமிது
நாளான பழக்கமிதை

பாழான பழக்கமிதை
புதியதொரு பாதையிலே
திசைதிருப்ப வேண்டுமடி
நீதிமிகு கதைசொல்லிப்
பாலகனை நீராட்டு!
வீரக் கதைசொல்லிப்

பாலனுக்குப் பாலூட்டு!
கருணைமிகு கதைசொல்லிக்
கண்மணிக்குச் சோறூட்டு!
அறிவுமிகு கதைசொல்லித்
திருமகனைத் தாலாட்டு!
புதியதிப் பாதைக்கு
நீயே வழிகாட்டி!

இப்பொழுதே உன்வீட்டில்
இப்பணியைத் தொடக்கி
விடு!

உனக்குத் தெரிந்தவர்க்கும்
இக்கருத்தை எடுத்துச்
சொல்!

வாசித்து மகிழ்வெய்த
வழக்கம்போல் எழுதவில்லை!
படித்துவிட்டுக் கடிதத்தை
மடித்து வைத்து மறக்காதே

— "முருகு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நிறைந்த அரசியலார் சிலர்—8

# தமிழருக்குத் தன்மானமூட்டிய ஜி. ஜி. பொன்னம்பலம்

"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கு 1947-ம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்ற வார்த்தைகளை உச்சரிக்காத தமிழர்கள் இலங்கையில் மிகக்குறைவு.

இந்தத்தாரகமந்திரத்தை உச்சரித்து இலங்கைத் தமிழர்களுக்கு சுதந்திரவேட்கையையும் உணர்ச்சியையும் ஊட்டி வைத்தவர் ஈழத்தமிழர்களின் தனிப்பெருந்தலைவராக விளங்கிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்

"தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"

என்ற தாரகமந்திரம் தான் முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்' அமோகவெற்றியீட்டுவதற்குக் காரணமாக இருந்தது!

திரு. ஜி ஜி. பொன்னம்பலத்தின் நினைவுதினம் கடந்த எட்டாம் தேதி. நாட்டின் இன்றைய நிலையைக்கருத்தில் கொண்டு மிக அமைதியாக அனுஷ்டிக்கப்பட்டது.

"இந்தியாவில் ஜின்னு இலங்கையில் பொன்னு" என்று கோஷம் ஒலிக்குமளவுக்கு இலங்கையில் தமிழர்களின் விடிவெள்ளியாக மக்களால் கருதப்படவர் திரு. ஜி. ஜி.

இன்று இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் வாதிகள் பலருக்கும் வழிகாட்டியாகஅமைந்தவரும் திரு. ஜி ஜி. தான்.

இலங்கையில் புகழ்பூத்த வழக்கறிஞர் என்ற பெயரையும் பெற்றவர் திரு. ஜி. ஜி. அரசியலிலும் சரி சட்டத்துறையிலும் சரி தனக்குநிகர் எவருமில்லை என்று கூறுமளவுக்குச் சாதனை ஏற்படுத்தியவர்.

சட்டத்துறையில் திரு. பொன்னம்பலம் நிலைநாட்டிய சாதனைகளையும் அரசியலில் அவர் பதித்தமுத்திரைகளையும் தனித்தனியாக பலதொகுதிகள் கொண்ட நூலாக வெளியிடலாம்.

திரு. பொன்னம்பலம் கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியைக்கற்ற பின்லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து இயற்கை சாஸ்திரத்தில் பட்டங்கள் பெற்றார். பின்னர் பாரிஸ்டர் பட்டம்பெற்று நாடுதிரும்பினார்

வழக்குரைஞராகத்தொழிலை ஆரம்பித்த திரு பொன்னம்பலம் எடுத்த எடுப்பிலேயே பெயர்பெற்றார். எந்த ஒரு வழக்கிலும் ஏற்படுவதற்கு அவர் ஒப்புக்கொண்டாரானால் அந்த வழக்கு நிச்சயம் வெற்றிபெறுமென்ப உறுதியாகிவிடும்.

திரு. பொன்னம்பலம் ஒரு வழக்கில் ஆஜராகிவாதாடுகிறார் என்றால் அந்தவழக்கு விசாரணையைப்பார்ப்பதற்காக நீதிமன்றத்தில் திரளும் ஜனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது பொலிசாருக்குப் பெரும் தொல்லையாகிவிடும்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அத்தியட்சகராகக்கடமையாற்றியபோது சிட்னி டி சொய்சாவுக்கு எதிராகப்பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டது. இவ்வழக்கு யாழ்ப்பாணம் சுப்றிம்கோர்ட்டில் நடைபெற்றது. திரு சொய்ஸா இவ்வழக்கில் தப்பமுடியாது என்பது பொதுவாக நிலவிய கருத்து. சொய்ஸாவுக்காக திரு. ஜி ஜி ஆஜராகி வாதாடினார் பல தினங்கள் இவ்விசாரணை நடைபெற்றது. முடிவில் சொய்சா விடுதலையானார். ஜி. ஜி. யின் வாதத்திறமையால்தான் அவர் விடுதலை பெற்றார்.

வாண்ட பூட்டன் கொலை வழக்கு உருளவெள்ளித் தோட்ட வழக்குகள் என்பன பிரபல்யம் பெற்ற மற்றும் சில வழக்குகள். இவ்வழக்குகளிலும் ஜி ஜி, வெற்றிக்கொடி நாட்டினார்.

இந்த வழக்குகள் எல்லாவற்றையும் விட இரண்டு வழக்குகள் திரு. பொன்னம்பலத்தின் வாதத்திறமையை மட்டுமல்ல அவரின் சேவையை வரலாற்றில் பொறித்துவைத்தன.

### இரு முக்கிய வழக்குகள்

1962-ஆம் ஆண்டில் நடந்த புரட்சிச்சதி வழக்கும் 1976ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் மூன்று கூட்டணி எம். பிக்கள் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்குமே அவையாகும்

1962-ஆம் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயகா அரசாங்கத்தைப் புரட்சிச்சதி

### எஸ். எம். ஜி.

மூலம் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்ததாக இராணுவ கடற்படை ஆகியவற்றையும் பொலிஸ் இலாகாவையும் சேர்ந்த பல பெரிய அதிகாரிகளுக்கெதிராகக்குற்றம் சாட்டப்பட்டு வழக்குத்தொடரப்பட்டது இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக அதிகாரிகள் பலரும் கைது செய்யப்பட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். கடற்படைத் தளபதியாக இருந்த றோய்ஸ்டி மெல் மட்டும் கைதாகவில்லை. அவர் தலைமறைவாகிவிட்டார். அவரைக்கண்டுபிடிப்பதற்குப் பொலிஸார் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தனர். அவரைப்பற்றிய தகவல் தருபவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றிருக்கலாமென்றே கருதப்பட்டது. வெளிநாடுகளிலும் அவரைத் தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சிகளும் நடைபெற்றன.

(10ம் பக்கம் பார்க்க)




நமது வீட்டில் இருந்து கொண்டு நமது உணவுகளையே உண்டு நமக்கே துன்பம் செய்யும் பிராணிகளில் எலி மிகவும் கொடியதாகும். எலிக்கடியை மக்கள் அலட்சியம் செய்வதாலும் எலிகடிக்கும் போது இரவில் கடிப்பதாலும் தெரியாது கடிப்பதாலும், மக்கள் இதன் கடியின் வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும் காணமுடிவதில்லை தக்க சிகிச்சை செய்யமுடிவதில்லை. நோய் முற்றிய பின்னர் பல காரணங்களைக் கற்பித்து இன்ன நோய் என்று காணமுடியாத நிலையில் பல தரப்பட்ட சிகிச்சை முறைகளைச் செய்தும் பயன் காணாது மாறுபண்ணும் உணவுத் தானியங்களில் 5/1 பங்கை எலி நாசம் செய்து அழிக்கின்றது. மனிதனின் உடைகளை அழிக்கின்றன. அறிவுச் சாதனங்களாகிய ஏடுகள், புத்தகங்களை அழிக்கின்றது. சுருக்கமாகக் கூறப்போனால் எலி மனித குலத்தின் பரம எதிரி என்பது புலனாகும். ஆனால் இத்தனைக்கும் அவை எங்கள் வீட்டில் தோழமை கொண்டாடித் திரிவதால் நாம் இதன் கொடுமையைச் சிந்திப்பதில்லை.

### பாம்பிலும் கொடியது

பாம்பிலும் கொடியது எலி என்றால் மிகையாகாது. காரணம் பாம்பு நம்மைத் தேடிக் கடிப்பதில்லை. சாத்திராப்பிரமாக நம் அதனை மிதிப்பதாலும் அதன் சூழலில் செல்வதாலும் அது பயத்தினால் தற்பாதுகாப்புக்காக நம்மைத் தீண்டுகின்றது. பாம்பு கடித்தவுடன் பாம்பு கடித்துவிட்டது என்ற திடமான நம்பிக்கையுடன் தக்க வைத்தியனிடம் சென்று சிகிச்சை செய்தால் குணம் பெற்று சுகமே வாழ வழியாகின்றது. ஆனால் எலி எங்களை தெரியாமல் ஒழித்து எங்களைத் தேடிவந்து கடித்து எங்கள் இரத்தத்தைக் குடிப்பதற்கும் தோலைச் சுவைப்பதற்கும் விரும்பி வந்து கடிக்கின்றது இதனை நாம் உணர்வதுமில்லை நம்புவதுமில்லை. காலில் நோவு ஏற்பட்டால் செருப்பு ஆணி குத்தியிருக்கலாம், கல்லுக்குத்தியிருக்கலாம் என எண்ணுகிறோம். எலிதான் கடித்தது என்ற எண்ணமே நினைவில் [illegible] யால் கற்பனை செய்துகொண்டு சிகிச்சை செய்கின்றோம். ஆனால் நோய் தீரவேண்டியதற்கு மாறாக நோய் கூடிக்கொண்டே போவதால் சிகிச்சை முறைகளும் வேறுபடுகின்றது. என்றாலும் தக்க காரணம் கண்டுபிடிக்கும் வரையும் துன்பம் தான். நோய்க்குறிக்கு காரணம் கண்டுகொண்டால் நோய்தீர்ப்பது இலகுவாகும். எலி ஒருவரைக்கடித்து அவரின் இரத்தத்தின் சுவையைக்கண்டுவிட்டால் திரும்பத் திரும்ப அவரைக் கடித்துக்கொண்டேயிருக்கும். அவரை மாத்திரமல்ல அந்த வீட்டிலுள்ள எல்லோரையும் கடிக்கும். இதனை வழமையாகக்கொள்ளும்.

## உடனிருந்தே கேடு செய்யும் எலி

பாடான வைத்திய முறைகளால் நோய் அதிகமாகி ஈற்றில மரணத்துக்கே வழிகாட்டுவதும் பல வருடக்கணக்கில் வேதனையும், வருத்தமும் தீரா நோயுமாக நடைப்பிணமாக மக்களை மாழச் செய்யும் தன்மை எலி விஷத்துக்கு உண்டென்றால் யார் தான் நம்புவார்கள்.

### உடன் இருந்து கொல்லும்

"உடன் பிறந்தேகொல்லும் வியாதி" என்னும் பழமொழி போல எங்கள் உடல் இருந்து எங்கள் உணவையே உண்டு எங்களுக்கே துன்பம் செய்யும் எலிக்குலத்தை நமது வீட்டிலல்ல சுற்றுடல்சூழலிலே இல்லாது அழித்து ஒழித்து விடவேண்டியது மனிதகுலத்தின் கடமையாகும், மனிதனைக் கடித்துத் துன்பம் செய்வது மாத்திரமல்ல. மனிதன் தனது சீவியத்துக்காகச் செய்கை

### திரும்பத் திரும்ப கடிக்கும்

கடித்த எலியை பொறி வைத்தோ, அன்றேல் நஞ்சூட்டியோ கொல்லாவிட்டால் திரும்பத்திரும்ப கடித்துக் கொண்டேயிருக்கும். இது எனது ஆராய்ச்சி மூலம் கண்ட அநுபவமாகும். உலகிலுள்ள விஷ ஜெந்துக்களில் கொடிய விஷமும், மனித சமூகத்தின் பரம எதிரியும் நமது பொருள்களையெல்லாம் நாசம் செய்யும் நாசகாரியும் எலிக்குலமே என்றால் மிகையாகாது. பாம்பினங்கள் மற்றும் விஷ ஜெந்துக்கள் எல்லாம் குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பிட்ட பருவங்களில் பொருத்தமான சீதோஷ்டணமான இடங்களில் சூழல், சந்தர்ப்பம், இயற்கை அமைவுக்கு ஏற்பவே வாழ்கின்றன. ஆனால் எலிகுலமோ உலகில் எந்தச்சூழலிலும் எந்தச் சுவாத்திய நிலையிலும் மனிதனை மையமாக வைத்துக் கொண்டே வாழ்கின்றது. உலகிலுள்ள பலவகைப்பிராணிகள் அத்தனையிலும், கொடியதும், துன்பமானதும் மனித [illegible] கொல்லக்கூடியதும் எலிக்குலமே என்றால் மிகையாகாது. வர்க்கவிருத்தியிலும் இவை பல்கிப் பெருகிவாழ்கின்றன. வருடத்தில் ஒரு பங்காக இருக்கும் எலிகள், இரண்டு வருடத்தில் ஐந்து பங்காகப் பெருகும்.

### எலிகளில் 125 வகை

உலகில் கிட்டத்தட்ட 125 வகையான எலிகளே இருக்கின்றன ஆனால் எங்கள் இலங்கையில் 18 [பதினெட்டு வகை) எலிகளே இருக்கின்றதென வைத்திய ஆராய்ச்சிகள் மூலம் காணக்கூடியதாக இருக்கிறது. எலிகளுக்கு உணவுப் பிரச்னை இல்லை. எதை உண்ண வேண்டுமென்பதில்லை மற்றய பிராணிகளில் தாவரபட்சணி, மாமிச பட்சணி என்று பிரிக்கலாம். ஆனால எலி எல்லா வகைகளையும் தனக்குச்சாதகமாக்கி வாழக்கூடியது. கண்ணிற்பட்டதையெல்லாம் கடித்து, அரித்து, துளைத்துப் பார்க்கும். அதன் கூரிய பற்களால் கடிபடக்கூடிய பொருள்களையெல்லாம் கடித்து நறுக்கி நாசம் செய்துவிடும். நமது வீட்டுப்பொருள்கள், தானியங்கள், சமையல் அறையிலுள்ள உணவுப்பொருள்கள், சோப்பு, செருப்பு, காகிதம், புத்தகங்கள், ஏடுகள் யாவையும் சேதப்படுத்தும் மின்சாரக்கம்பிகளைக் கூட கடித்து நறுக்கி, மின்ஒழுக்கை ஏற்படுத்தி பெரிய தீ விபத்தைக்கூட ஏற்படுத்தி அழிவுக்கு வகை செய்யக்கூடிய வல்லபம் எலிக்கு உண்டென்பதை நாம் அதிகம் சிந்திப்பதில்லை, எலியின் நடவடிக்கைகளையும் செயலபாடுகளையும் அவையால் மனித குலத்துக்கல்ல உலக உயிர் குலத்துக்கே ஏற்படும் தீமைகளும், துன்பங்கள். ஆபத்துக்களும் அனேகம், அனேகமாகும்.

[தொடரும்]

## சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நெஞ்சத்து வேதனைகள் ஒன்று திரண்டு கண்ணீர் கண்களில் பெருக ஆரம்பித்தது.

"பெரிய ஆபத்து ஒன்றும் இல்லையாப இன்னும் அரை மணித்தியாலத்தாலசுய நினைவு வந்திடுமாம்" எனக்கணேசன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே—

"மச்சான்" என்று சொல்லிக்கொண்டு சிவநேசன் பொங்கிவரும் அழுகையை அடக்க முடியாமல் அழத் தொடங்கினான்.

(யாவும் கற்பனை)

## ஆராய்ச்சி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிய பகுதிகளை ஆதாரம் காட்டி க. சுப்பிரமணியன் எழுதிய மதிப்புரையைப் படிக்கும்பொழுது மூல நூலை மீண்டும் படிக்கவேண்டும் என்ற ஆவல் பிறக்கிறது

★

அடுத்த வாரம் 'ஆராய்ச்சி' ஏட்டின் ஏனைய இதழ்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபு ராஜேந்திரப்பிரசாத் அவர்களின் 100வது பிறந்ததினம் நாளை

# குடும்பநலனிலும் நாட்டுநலனைமதித்த ராஜன் பாபு

## ஆ. பொ. சூரியகாந்தன்

மகாத்மா காந்தியின் கொள்கைகளை ஏற்று அவர் விரும்பிய நவபாரதத்தை அரசியல் ரீதியாக உருவாக்கினர் நேரு. அதேபோன்று காந்தியின் சத்தியத்தையும் அகிம்சையையும் இந்திய மண்ணில் நிலைபெறச்செய்தவர் இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி பாபு ராஜேந்திரப் பிரசாத் அவர்கள்,

இந்தியாவின் விவசாய விளைநிலமான பீகார் மாநிலத்தின் சாரண் மாவட்டத்திலுள்ள ஜீராதேயீ கிராமத்தில் 1884ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி இவர் பிறந்தார். ஆரம்ப கல்வியைத் தமது சொந்தக் கிராமத்திலேயே கற்ற இவர் கல்வியில் வல்லமை பெற்று பல்கலைக்கழகம் சென்று உயர் கல்வி பெற்றார். பல்கலைக்கழகத்தில் முதல் மாணவனாகத் திகழ்ந்த இவர் சிலகாலம் ஆசிரியராகவும் கடமையாற்றினர் பின்னர் 1915ல் சட்டத்தரணியானர்

இவர் பல்கலைக்கழகத்தில் பயின்ற நாள்களில் குறிப்பாக 1906ல் காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் கூடியபோது அதன் தொண்டர் சபையில் சேர்ந்து பொதுச்சேவைக்கு உழைக்கலானர். அன்றிலிருந்து அவரது முழுக்கவனமும் நாட்டு நலன் பற்றித்திரும்பியது. ஆயினும் கல்கத்தா, பட்ன உயர்நீதிமன்றங்களில் வக்கீலாகத்தொழில் புரிந்த அவர் நீதிக்காகவும், ஏழை, எளிய நலிவடைந்தவர்கள். வெள்ளையர் சட்டங்களினல் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே பெரும்பாலான வழக்குகளில் வாதாடினர்.

கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் அமைத்திருந்த 'இந்திய ஊழியர் சங்கம்' நாட்டுச் சுதந்திரத்திற்காகப் பெரும் பணியாற்றிவந்தது. இச்சங்கத்தில் சேர்ந்து கொண்டவர்கள் குடும்பத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களாகவே கருதப்பட்டார்கள். இச் சங்கத்தில் சேர்வதற்கு ராஜேந்திரப் பிரசாத் விரும்பினர். இது தொடர்பாகத் தமது அண்ணருக்கு எழுதிய கடிதம் உண்மையில் பொதுச் சேவை தொடர்பாக அவர்கொண்டிருந்த மன நிலையை எடுத்துக்காட்டுவதாயுள்ளது. அக்கடிதம் வருமாறு;



''அன்புமிக்க அண்ண!

''இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்வதென்று நான் முடிவுசெய்து விட்டேன். வாழ்வுக்காக நமதுகுடும்பம் என்னையே நம்பியிருக்கிறது. ஆனல் நமது குடும்பத்தை பார்க்கிலும் 30 கோடி மக்களின் நலனேமேலானது அதனலந்தத் தியாகத்தைச் செய்வதற்குத் துணிந்துவிட்டேன். இது தியாகம் அல்ல. நாட்டுமக்கள் அனைவரும் செய்ய வேண்டிய கடமையாகும். பாரத மாதாவின் சுதந்திரத்துக்காகச் சிறு பணியாவது செய்ய வேண்டுமென்பது எனது நீண்ட நாள் ஆசை வக்கீலாக நான் இருந்தால் பெரும் பணம் கிடைக்குமே தவிர எனது எண்ணம் நிறைவேருது. என் முடிவை மனைவிக்கு எழுதிவிட்டேன். அம்மாவுக்கு எழுதத்துணிவுஇல்லை.

(11ம் பக்கம் பார்க்க)

## இவ்வாரம் எப்படி?

**இன்று**

மாதம்- கார்த்திகை
திகதி- 17 [2-12-1984]
வாரம் ஞாயிறு
திதி- நவமி காலை 7-10ன் மேல் தசமி
நக்ஷத்திரம்-உத்திரட்டாதி முழுநாளும்

**மேடம்**
நலன் தரும் சம்பவங்கள் இடம்பெறும். நலிவு சொல்லாமல் பறக்கும். இல்லத்திலும் இனிமை தவழும். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்க நேரும். எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு.

**இடபம்**
ஆசை அலைமோதும். வேண்டாத நடவடிக்கைகள் உங்களை விபரீதத்தில் மாட்டிவைக்கும். சகோதரர் ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படும்.

**மிதுனம்**
கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும். வாகனச்சொந்தகாரர்களுக்கு வரவில் மந்தம் ஏற்படும். தாய்வழியால் மகிழ்ச்சி தென்படும்.

**கடகம்**
குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும் இதயத்தில் இன்பம் பொங்கும். உங்கள் முன்னேற்றத்திற்கு அரசியல் வாதியொருவர் ஆதரவு கொடுப்பார். தொழிலிலும் போற்றத்தக்க முன்னேற்றம் உண்டு.

**சிங்கம்**
முன்னேற்றம் தடைப்படும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். உடல்நலத்தைப்பேணவும். நண்பரின் கடிதமொன்று வேதனை தரும். எதிர்பாராத பிரயாணங்களுக்கும் இடமுண்டு.

**கன்னி**
புதிய நட்புக்கிடைக்கும். வெற்றிப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள் களஸ்திர சுகத்திற்கும் இடமுண்டு. காதலர்களுக்கு இனிப்பான வாரம்.

**துலாம்**
மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்கநேரிடலாம். தொல்லைகள் அதிகரிக்கும். கடமையிலும் குறை கேட்க நேரும் நஷ்டத்திற்கும் இடமுண்டு. நாவடக்கம் வேண்டும்.

**விருச்சிகம்**
உடம்பை அலட்டிக்கொள்ளாமலே உயர்வுக்கு வழிகாண்பீர்கள் மேலிடத்து உறவு உற்சாகத்தை அளிக்கும். பிதாவழி மூலம் தகுந்த உதவி கிடைக்கும்.

**தனுசு**
வித்தையில் வெற்றிகிட்டும். வேண்டியதும் கிடைக்கும். நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். முயற்சியால் பணம் கிடைக்கும்.

**மகரம்**
அதிர்ஷ்டகரமான வாரம். வியாபாரத் துறையில் அதிக வருமானம் கிடைக்கும். பயன் தரக்கூடிய உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்படலாம். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள்.

**கும்பம்**
எதிலும் மந்தநிலைதென்படும். வாழ்க்கையும் ஒரு சுமையாகத் தோன்றும் கடன் தொல்லையும் அதிகரிக்கும். தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள் கோபத்தையும் அடக்கவும்.

**மீனம்**
நிச்சயமற்றநிலையில் வேதனையும் எதிர்பார்த்த பொருள் வரவில் தடையுமுண்டு. உடல் நலத்தைக் கவனிக்கவும்.

க. வே. ரவீந்திரன்

# தமிழ்ப் பண்பின் வாரிசு அமரர் அசீஸ்

அண்மையில் பிரதம நீதியரசர் சர்வானந்தாவின் பதவி அமர்வன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடந்த விசேடபூசை பற்றி பத்திரிகையில் படித்தபோது இன்று 11 வருடங்களுக்குமுன் அமரத்துவம் அடைந்த முஸ்லிம் சமுகத்தின் பெருந்தலைவர் அப்துல் அசீஸின் நினைவு வந்தது.

யாழ்ப்பாணத்தின் பிரபல முஸ்லிம் நியாயவாதி அபூபக்கரின் மகன்; இங்கு பிறந்து வளர்ந்து வைத்தீஸ்வரவித்தியாலயத்திலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று 1928ல் இலங்கை பல்கலைக்கழக கல்லூரியில் படித்து லண்டன் பல்கலைக்கழகத்தில் B.A(Hons) உயர்பட்டம் பெற்று கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில்மேற்படிப்புக்கு புலமை (Arts Scholarship)ப் பரிசும் பெற்ருர்.

அதற்கிடையில் அன்று பெரிதாகக் கருதப்பட்ட இலங்கை சிவில் சேவிஸ் (C. C S )பதவி கிடைத்ததும் இங்கிலாந்திலிருந்து நாடு திரும்பி 13வருடங்கள் இலங்கை நிருவாகத்தில் பலதுறைப்பட்ட பணிகளில் திறம்பட உழைத்தார்.

முஸ்லிம் சமூகத்தில் முதலாவது. மேனட்டுப் படிப்புக்கு புலமைப் பரிசு பெற்றவர் இவரே; முஸ்லிம் சமூகத்தின் முதலாவது சிவில்சேவிஸ் உத்தியோகத்தவர் இவரே; இளைப்பாறி கொழும்பு சகிராக்கல்லூரி அதிபராக அவர் ஆற்றிய கல்விப்பணி அளப்பரியது.

முதலாவது முஸ்லிம் சீ. சீ. எஸ் இவரென்பதாக, இவருடைய பழைய கல்லூரி- யாழ். இந்துக்கல்லூரி சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் ஒரு விருந்துபசாரம் நடத்தியது. அந்த நினைவு இன்றும் பசுமையாயிருக்கின்றது

இதில் பங்குபற்றியவர்களில் இன்று முதியவராக இருக்கும்



நான் அன்று அவருடைய குரு பற்று கல்லூரிப்பற்று அவருடைய அழகிய பேச்சில் கண்டு அதிர்ச்சியுற்றேன்

தம்முடைய இனிய தமிழும் சமயப்பற்றும், இந்துக்கல்லூரியில் படித்த பாக்கியத்தால் யாழ்ப்பாண தேசியத்தலைவர்களுடன் கொண்ட தொடர்பால் ஏற்பட்டதென பகிரங்கமாகக் கூறிவந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சாதுர்யமான இனிமையான பேச்சாளர்.

வண்ணர்பண்ணையில் அவருக்கொரு விசேடபற்று; ஆறுமுகநாவலரின் தீர்க்கதரிசனத்தை, சகிராக்கல்லூரிக்கு வழிவகுத்த அறிஞர் சித்திலெப்பைக்கு ஒப்பிடுவார்.

திருக்குறளை ஒரு வேதநூலாகக் கொண்ட அசீஸ் கோரானுடன் அதனைச் சேர்த்து ஆராய்ந்ததால் ஒரு தேசிய ஆளுமையுடைய, அதேசமயம் தமிழ்மக்களின் நிகரற்ற நண்பனக என்றும் வாழ்ந்தார்.

—கே. எஸ். எஸ்.

# மௌனத்தின் மாட்சி

## நா. மாணிக்க இடைக்காடர்

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழ்ப்படம் பார்த்தேன். அதில் கலைவாணர் கிருஷ்ணன் நடித்திருந்தார் இவர் ஏதோ களவோ குறும்போ செய்யும் பொழுது மக்கள் காணவும் ஒரே ஓட்டமாய் ஓடி, கிராமத்திற்கு வெளியேயிருக்கும் பிள்ளையார் கோவில் விக்கிரகத்திற்குப் பின்னல் ஒளித்துக் கொண்டார். சிறிது நேரத்தில் பல விவசாயிகள் கோவிலுக்கு வந்து பிள்ளையாரிடம் 'சுவாமி இன்றைக்காவது மழை பெய்யக் கருணை காட்டுங்கள்; மழை பெய்யாவிட்டால் பயிர்கள் அழிந்துவிடும் என்று' முறையிட்டனர் இவர்கள் போக ஒரு நாடகக்குழு வந்தது. அவர்கள் பிள்ளையாரிடம், 'எங்கள் பிள்ளை குட்டிகள் உணவில்லாமல் வாடுகிருர்கள் இன்று மாத்திரம் மழைபெய்யாமல் காத்தருளுங்கள். அப்படியானல் நாடகத்தை நடத்தி ஏதோ பணம் பெற்றுவிடலாம்' என்று மன்ருடினர். இவர்கள் போனதும் கலைவாணர் வெளியே வந்து பிள்ளையாரைப் பார்த்து 'எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது' நீங்கள் ஏன் பேசிறதில்லையென்று' எனக் கூறினர் மௌனத்தின் ஒரு அம்சத்தை இக்கதை காட்டுகிறது.

ரமண மகரிஷி பேசியதாக எனக்குத் தெரியவில்லை இராமகிருஷ்ண பரமஹம்சர் தம்மிடம் செல்லும் பலருக்கும் இரண்டு மூன்று நாட்களாவது தனியே ஒரு இடத்திற்குச் சென்ற மௌனமாயிருந்து கடவுளைப் பற்றிச் சிந்தியுங்கள் என்று பலமுறை கூறியிருக்கிருர். காந்தியடிகள் வாரத்தில் ஒரு நாள் மௌனமாயிருந்தார் யோகர் சுவாமிகள் காந்தியடிகளைச் சந்தித்த நாள் அண்ணலின் மௌன நாள் ஒருவரையொருவர் வெகு நேரம் உற்றுப் பார்த்தார்கள். பிறகு அண்ணல் ஒரு கடதாசியில் 'உங்களைப்பார்க்க ஒரு பெரிய ஞானி போல் எனக்குத் தோன்றுகிறது. உங்களிடம் உரையாட வாய்ப்பில்லையே' என்று எழுதிக் கொடுத்தாரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஏதோ மௌனத்தின் பலனை அறிந்து வாரத்திற்கு ஒரு தினம் காந்தியடிகள் மௌனம் அனுஷ்டித்தார்.

ஞானிகள், அறிவாளிகள், பண்டிதர்கள்' விஞ்ஞானிகள் போன்ருேருக்கு மௌனம் தரும் பலனை தாமே அறிந்து கொள்வர். மௌனம் பொது மக்களுக்கும் வாழ்வில் இடையிடையே தேவை. பேசவேண்டிய இடத்தில் பேசவேண்டும். ஆனல் எல்லாவிடத்திலும் எல்லாநேரமும் பேசக்கூடாது இதனல் ஒருவருக்கும் பலனில்லை. வீணைகப் பேசியவர்களின் மூசசுத்தான் போய்விடும். நாங்கள் எப்பொழுதும் வள்ளுவர் பெருமான் கூறிய

''யாகாவாராயினும் நாகாக்க
காவாக்கால் சோகப்பர்
சொல்லிழுக்குப்பட்டு''


என்றவாக்கை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சுமார் 50ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் சேர்- ஜோன் சைமன் நிதி அமைச்சராயிருந்தார். ஒருநாள் மத்தியான போசனத்திற்கு வீடு வந்த பொழுது மௌனமாக இருந்தார். ஏதோ பாராளுமன்றத்தில் அன்று நடந்திருக்க வேண்டுமென்று நினைத்த மனைவி கணவனின் மௌனத்திற்கு காரணம் கேட்டார். அதற்கு சேர் ஜோன் ''ஆம், இன்று காலை எதிர்க்கட்சியினர் என்னை மிகவும் தாக்கிப் பேசினர்கள். என்னல் தாங்கமுடியவில்லை. என்ன பேசவேண்டும் என்றும் தெரியவில்லை. நல்லவேளையாக இடைவேளை வந்துவிட்டது.'' என்ருர். இதற்கு லேடி சைமன் உங்களைப் பாதிக்கக்கூடிய முறையில் யாரும் பேசினல் ஒன்றும் பேசாதீர்கள். ஒன்றும் செய்யாதீர்கள். ஒன்றுமாய் இராதீர்கள். (Say Nothing, Do Nothing, Be Nothing) என்ருர். இதற்கு சேர் ஜோன் அப்படியே செய்கிறேன். ''Be Nothing'' என்பதற்குத்தான் அர்த்தம் தெரியவில்லையென்ருராம். ''Be Nothing'' சொல்லும் போது லேடி சைமன் தன்னையறியாமலே ஞான வரம்பை எட்டிவிட்டார்.

ஒன்றும் சொல்லாதீர்கள் என்று லேடி சைமன் கூறியதை ஆழ்ந்து யோசித்தால் உடனே ஒன்றும் சொல்லாதீர்கள் என்பதுதான் அர்த்தம். இவ்விஷயத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் எங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஒருவர் பேசும்பொழுது கேட்டுக்கொண்டிருப்பவர் குறுக்கிடுவதில்லை. பேசுபவர் பேசிமுடிந்ததும் தன் அபிப்பிராயத்தை மற்றவர் கூறுவார்.

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீர்ப்பு

ரஜனி குஹநாதன்

ஒருவாரம் ஓடி மறைந்து விட்டது. எதுவித தகவலையும் காணாததால் செல்லரால் இருப்புக்கொள்ளமுடியவில்லை.

கந்தையரை அங்கு அனுப்பியாவது முடிவை அறிந்துவிடவேண்டும் என்ற ஆவலில் அடிக்கடி அவரிடம் போய் வந்துகொண்டிருந்தார்.

வேறு வழியின்றிக் கந்தையரும் புறப்பட்டபோதுதான் அவருக்கு உயிர்வந்ததுபோலிருந்தது. கந்தையர் எப்படியும் சரிப்பண்ணிக்கொண்டு வருவார் என்ற நம்பிக்கை அவருக்கு.

எப்போது வருவார் என்ற வாறு யன்னலருகே படலையைப் பார்த்தவாறு சாய்மனைக் கதிரையில் கிடந்தார்.

ஒவ்வொரு நிமிடமும் அவருக்கு மணித்தியாலமாகக் கழிந்துகொண்டிருந்தது.

அடிக்கடி ரோட்டுக்கு வந்து கந்தையர் வருகிறாரா என்று பார்த்துக்கொண்டார். வந்தால் நேரே இங்கேதான் வருவார் என்று மனம் அமைதிப்படவில்லை.

செல்லரின் நீண்ட அவஸ்தையை போக்குவதுபோல கந்தையர் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார்.

ஆண்டவனை வேண்டிக்

## 4

கொண்டு வெளியே வந்து வரவேற்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

''எப்பிடி அண்ணை... எல்லாம் சரிதானே..''

கந்தையர் எப்படி விசயத்தைத் தொடங்குவது என்று தெரியாமல் அவலப்படுவது தெரிந்தது.

''நானும் நம்மளுக்குள்ள நல்ல பெடியன் ஒருத்தன் வரப்போறான் எண்டு சந்தோஷப்பட்டன்... எல்லாம் பிழைச்சுப்போச்சுது''

செல்லருக்கு தூக்கிவாரிப் போட்டது.

குசினிக்கதவினூடே நின்ற ஷர்மினி தாங்கமுடியாத மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்துக்கொண்டு உள்ளே ஓடுவதை கந்தையர் கவனிக்கத் தவறவில்லை.

''என்னவாம் அண்ணை...'' குரல் கம்மியது செல்லருக்கு.

''அண்டைக்கு என்னட்டை வந்திற்றுப் போகேக்க நான் சொன்னதைக் கேட்டு வலு சந்தோஷமாப் போனபின்னை, இப்ப திடீரென்று மாறீற்றான் எனக்கண்ட உடன அவனுக்குப் பெரிய அந்தரமாப் போயிற்றுது''.

''ஏனும் விருப்பமில்லை'' இனியும் சமாளிக்க முடியாதா என்று செல்லர் நினைத்தார் போலும்.

''சிற்றம்பலத்தின்ர பொடியன் வீடுதேடிப்போயிருக்கிறான்..''

பரந்தாமன் மீது பழியைப் போட்டார் கந்தையர்.

செல்லருக்கு வந்த கோபத்தை அடக்க முடியவில்லை. பரந்தாமன் மட்டும் முன்னால் நின்றிருந்தால் அங்கே ஒரு கொலையே விழுந்திருக்கும்.

'இனியும் அவனை விட்டு வைக்கக்கூடாது'' என்று தனக்குள் நினைத்துக்கொண்டவராக கந்தையரிடம் கெஞ்சத் தொடங்கினார்.

''அண்ணே... அதில உண்மை எதுவும் இல்லை யெண்டு நீங்க சொல்லயில்லையே சும்மா கோயிலடியில நிண்டு கதைச்ச உடன பிள்ளை என்ன கெட்டா போச்சுது...''

''நான் எல்லாம் நல்லா சொல்லித்தான்பாத்தன். கிராமப்புறத்தில செய்ய வெளிக்கிட்டதே ஒழுங்கான பிள்ளையளாயிருக்குமெண்டுதான் எண்டு பொடியன் சொல்லிப் போட்டுது.''

பரந்தாமனை நினைக்க நினைக்க செல்லருக்கு உச்சியில் ஏறியது கோபம். மகளின் திருமணத்தை எப்படி ஒப்பேத்தலாம் என்பதைவிட அவனை எப்படி பழிவாங்கலாம் என்பதிலேயே கவனமாயிருந்தது.

பொதுத்தேர்தல் ஒன்றில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் கச்சேரியில் முடிவுகள் வெளியான பின்னர் வெற்றிக் களிப்பில் வெளியேறுவது போல கந்தையர் சென்றுகொண்டிருந்தார்.

செல்லர் கோபம் முழுவதையும் மகளில் தீர்த்துக்கொண்டார்.

அன்று மாலை -

வழக்கமாக அமர்ந்திருக்கும் சாய்மனைக் கதிரையில் அமர்ந்திருந்த செல்லர் மகளின் அலுவலை எப்படி முடிக்கலாம் என்பதில் மூளையைப்போட்டுக் குழப்பிக்கொண்டிருந்தார்.

இதைவிட நல்லநேரம் இனி எங்கே கிடைக்கப்போகிறது என்று எண்ணியவளாக முன்னாலிருந்த கதிரையில் வந்தமர்ந்த காமாட்சி கணவனைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தில் ''இனி என்ன செய்யுறது... அதுக்காக நீங்க மண்டையைப்போட்டுக் குழப்பிக்கொண்டிருந்தா...'' என்றாள்.

வாழ்க்கையிலே முதல் தடவையாக மனைவி தனக்கு ஆறுதல் கூறவந்துவிட்ட திருப்தியில் பூரித்துப்போனார் செல்லர்.

''இனி எங்கயப்பா பேசுறது... இது எப்படியும் சரிவந்திடும் எண்டு நினைச்சன்...''

மனைவியுடன் நீண்ட காலத்துக்குப் பின்னர் ஆறுதலாகக் கதைத்தார்.

வெளியுலகுக்கு இருவரும் அந்நியோன்யமான தம்பதிகளாக இருந்தாலும் இருவருக்குமிடையே உள்ள இடைவெளிபற்றி சிலருக்குத்தான் தெரியும்.

''பேசுற இடமெல்லாம் குழம்புறதைப் பார்த்தா அவன் பொடியனுக்கே செய்து கொடுத்திடலாம் போல கிடக்குது...''

அடிபட்ட நாகம் போல சீறிப்பாய்ந்தார் செல்லர்.

''அவள் வாழாவெட்டியா இருந்தாலும்... அந்தப்பரதேசிப்பயலுக்கு செய்து கொடுத்தா என்ரை மரியாதை என்ன ஆகிறது...''

''இல்லையப்பா...பரதேசியா இருந்தாலும் கெட்டிக்காரப் பொடிதானே... ரகசியமா பெடியைக்கூப்பிட்டுக் கதைச்சுப்போட்டு நம்மட காசைக் குடுத்து வெளியால எங்கேயன் அனுப்புவம் பிறகு செய்யலாம்''.

தன்னால் ஒருவன் வாழ்வு பாழானது போல தன்மகளால் இன்னொருவன்வாழ்வு பாழாகிவிடக்கூடாது என்பது காமாட்சியின் நினைப்பு. தான் விரும்பியவனை கட்டாமல்பெற்றோரின் வற்புறுத்தலால் செல்லரைக் கட்டியவள்தான் காமாட்சி.

ஆனால் அவன் இப்போதும் ஒரு பிரமச்சாரி.

இந்த நிலை பரந்தாமனுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பது அவளது விருப்பமாக இருந்தது.

''காமாட்சி... நீ உன்ரை வேலையைப்பார்...'' கத்தினார் செல்லர்.

''அவனைச் செய்துபோட்டு றோட்டில இறங்க ஏலுமே...'' செல்லர் கூறியபோது குறுக்கிட்டவள் ''பேசுற இடமெல்லாம் இதால குழம்புறதும் உங்களுக்குத்தானே கூடாது'' என்றாள்

எந்த சமாதானத்தையும் ஏற்கும் நிலையில் செல்லர் இல்லை. இனியும் மனைவியுடன் கதைப்பதில் பயனில்லை என்று தீர்மானித்தவராக எழும்பி றோட்டுக்கு சென்றுவிட்டார்.

ஏதாவது யோசனை அதிகமாகிவிட்டால் செல்லர் எப்போதுமே அப்படித்தான். வீட்டுக்கு முன்னாலுள்ள றோட்டில் ஆறுதலாக நான்கு தடவை நடந்தால் போதும். நல்லதொரு தீர்வு அவருக்குக் கிடைத்துவிடும்.

தாய்க்கும் தகப்பனுக்குமிடையே நடந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த ஷர்மினிக்கு, தாய் தனக்குச் சாதகமாகக் கதைத்ததைக் கேட்டதும் பரந்தாமனே தனக்குக் கிடைத்துவிட்ட திருப்தி ஏற்பட்டது.

செல்லர் நீண்ட நேரமாக றோட்டிலேயே உலாத்திக் கொண்டிருந்தார். மகளின் கல்யாணத்தை நடத்திமுடிக்க வேண்டுமென்றால்பரந்தாமனை முதலில் இந்த ஊரைவிட்டு துரத்தியாக வேண்டும் என்பதே அவரது யோசனையாக இருந்தது

நீண்டநேர யோசனையின் பின்னர் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராக உள்ளே வந்தார்.

பரந்தாமனைப் பழிவாங்குவதே அவரது ஒரே எண்ணமாக இருந்தது.

[அடுத்த வாரம் முற்றும்]

## ஒரு கவிதை

எனது கவிதை
சுதந்திரமாக இருக்கிறது
ஆனால்—
எங்கள் சுதந்திரம்
கவிதையாக இல்லை!

நா. காமராசன்

# தமிழருக்குத்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## ரேய்ஸ்டிமெல் எங்கே?

ரேய்ஸ்டிமெல் இல்லாமலே புரட்சிச் சதிவழக்கை விசேஷ ட்றயல் அட்பார் நீதிமன்றத்தில் விசாரிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இவ்வழக்கை விசாரிப்பதற்காக கொழும்புத் துறைமுகத்துக்கு அருகேயுள்ள கடற்படைத் தலைமை அலுவலகத்தில் ட்றயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டிருந்தது. புரட்சிச்சதி சந்தேகநபர்களை நீதிமன்றத்துக்குக் கொண்டு வருவதற்கும் கொண்டுபோவதற்கும் பாதுகாப்பான விஷேச வாகனங்களும் உருவாக்கப்பட்டிருந்தன. எங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன,

மூன்று நீதியரசர்களைக் கொண்ட இந்த ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் புரட்சிச் சதி வழக்கு முதல்நாள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேக நபர்கள் பலரின் சார்பிலும் தாம் ஆஜராவதாகத் தெரிவித்து அவர்களின் பெயர்களையும் குறிப்பிட்ட திரு. ஜி ஜி. பொன்னம்பலம் ரேய்ஸ் டி மெல் சார்பிலும் தாம் ஆஜராவதாகத் தெரிவித்தார்.

ரேய்ஸ் டி மெல் எங்கே? என்ற கேள்வி நீதிமன்றத்தில் எழுந்தது.

இக்கேள்விக்கு சுலபமாகப் பதில் கிடைக்கவில்லை. அவர் பற்றிய மர்மம் இன்னமும் துலங்காமலே இருந்தது.

திரு ஜி. ஜி. எழுந்து ரேய்ஸ் டி மெல்லை நான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வேன்'' என்று அறிவித்ததும் நீதிமன்றத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

ஜி. ஜி. சொன்னபடியே ரேய்ஸ் டி மெல்லை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்! வழக்கில்வாதாடி பெரும் சாதனையையும் நிலைநாட்டினார்.

## தமிழ் எம். பி. க்கள் மீதான வழக்கு

தனித் தமிழ் ஈழத்தை அமைக்ககோரும் துண்டுப்பிரசுரங்களை வைத்திருந்ததாகவும் அவற்றை மக்களுக்கு விநியோகித்ததாகவும், பிறவுக்காகவும், குற்றம்சாட்டி திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வ. நவரத்தினம், திரு. கா. பொ. இரத்தினம், திரு. க. துரைரத்தினம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் முன்னிலையில் ஜூரிமார் இல்லாமல் ட்றயல் அட்பார் முறையில்வழக்கு விசாரிக்கப்பட்டது.

இவ்வழக்கில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் பெருந்தொகையான சட்டத்தரணிகள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரானபோதிலும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திரு. மு. திருச்செல்வம், திரு வி. எஸ். ஏ, புள்ளநாயகம் ஆகிய மூவருமே வழக்கில் வாதாடினர்.

இவ்வழக்கில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜராகி வாதாடியது ஈழத்தமிழ்மக்கள் வரலாற்றில் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததும் என்றும் நிலைபெறவேண்டியதுமாகும்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்தவர்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை அமைத்தபின் இரண்டு கட்சியினருக்குமிடையில் வேற்றுமை வளர்ந்ததேயொழிய ஒற்றுமை ஏற்படுவதற்கான வாய்ப்பே இருக்கவில்லை. தேர்தல் காலங்களில் இரு தரப்பினரும் மேடைகளில் கடுமையாகத் தாக்கிக் கொள்வார்கள்.

1976ம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையிலுள்ள பண்ணாகத்தில் நடந்த மகாநாட்டில் அமைக்கப்பட்டபோது மூன்று பேர் கூட்டணியின் தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்களில் திரு ஜி ஜி யும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் இத்தெரிவு சம்பந்தமாக அவர் எதுவித கருத்தையும் வெளியிடவில்லை.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கத்தின் மீதும் மற்றும் மூன்று கூட்டணி எம்பிக்கள் மீதும் குற்றச்சாட்டி வழக்குத் தொடரப்பட்டபோது கூட்டணியினருக்காக ஜி. ஜி. ஆஜராகி வாதாட முன்வந்ததும் கூட்டணி பற்றிய அவரது கருத்துத் தெளிவானது!

[மிகுதி அடுத்தவாரம்]

# ஒலிவர் ருவிஸ்ற்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மாறிமாறி பார்த்துக்கொண்டிருந்தான் தரையில் பழைய சாக்கினால் ஆன பல கட்டில்கள் பக்கம் பக்கமாக விரித்துவிடப்பட்டிருந்தன. மேசையைச் சுற்றி நான்கு ஐந்து பையன்கள்-டாக்கின்ஸ் அளவு வயதானவர்கள் - அமர்ந்துகொண்டு நீண்ட மண் குழாய்களில் வளர்ந்த மனிதர்களைப்போல் புகைபிடித்துக் கொண்டிருந்தார்கள். பேஜின் அருகில் சென்று டாக்கின்ஸ் ஏதோ இரகசியம் சொல்லவே எல்லாரும் அவனைச் சுற்றிக்கொண்டு நின்றார்கள். பின்னர் ஒலிவரைப்பார்த்தார்கள். பேஜினும் பார்த்தான்.

''இவர்தான் என் நண்பன் பேஜின்! பெயர் ஒலிவர் ருவிற்ஸ்'' என்று அறிமுகம் செய்தான் டாக்கின்ஸ், யூதன் ஒலிவருக்கு வணக்கம் சொன்னான். நட்பு பாராட்டினான்.

''உன்னைக்காண நேர்ந்ததற்காக மிக மிக மகிழ்ச்சி ஒலிவர்'' என்றுகூறியயூதக்கிழவன் ''டாக்கின்! அடுப்பில்கிடக்கும் வறுவலை இறக்கிவிட்டு நெருப்புக்கருகில் ஒலிவருக்கு கதிரையைப்போடு'' என்றான். பிறகு; ஆ! ஒலிவர் அந்தக் கைக்குட்டைகளைப் பார்க்கிறாயா? அவை ஏராளம் கிடக்கின்றன. அவைகளை இப்போதான் பிரித்துப் பார்த்து முடித்தோம். அவை சலவைக்குத் தயாராய் உள்ளன அவ்வளவுதான்... அஹ் அஹ் ஹா'' என்று சிரித்துக்கொண்டான்'

இதைக்கேட்டு அங்கிருந்த பையன்கள் எல்லாரும் பலமாகச் சிரித்தார்கள்.

ஏனென்றால் இந்தக்கைக்குட்டைகள்யாவும்அவர்களால்வீதியில் போகிறவர்களின் பாக்கட்டுகளில் இருந்து திருடப்பட்டவை என்பது ஒலிவருக்குத்தெரியாது.

எல்லாருமாக மாலை உணவு அருந்தஆரம்பித்தார்கள் ஒலிவருக்கும் ஒருபங்குகிடைத்தது. யூதக்கிழவன் ஒரு கோப்பை தண்ணீரில் ஜின் கலந்து ஒலிவரிடம் கொடுத்தான். கோப்பை இன்னொரு பையனுக்குத் தேவைப்படுவதால் ஒரே மூச்சில் குடித்து விட்டு கோப்பையைத்தரும்படி கேட்டான் ஒலிவர் கிழவன் சொன்னபடி செய்தான். உடனடியாகவே அவனை யாரோ மெதுவாகத் தூக்கிச்சென்று அங்கிருந்த சாக்குக்கட்டிலில் படுக்கவிட்டார்கள். அத்துடன் ஆழ்ந்த நித்திரையில் ஒலிவர் மூழ்கிப் போனான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மு. கருணாநிதியின்
**பூமாலை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30,
2வது கொட்டகை நிரம்பிய வாரமாக யாழ். நகரில் என்றுமே இல்லாதளவு மாதர்கள் பெருந்திரளாக பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் ஓர் திரைப்படம் தான்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
(கலர்)
ஏமாற்ற மடையாமல் இன்றே பார்த்துமகிழுங்கள்

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-00, P. M.
ஜெய்சங்கர்
**துணிவே துணை**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
ராஜராஜசோழன்
(கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30,
Brooke Shields
Christopher Atkins
"THE BLUE LAGOON"
கப்பல விபத்தில் தப்பி ஒரு தீவில் கரைசேர்ந்து வளர்ந்த இரு சிறுர்களின் காதல் காவியம்.
கண்டிப்பாக வயதுவந்தவர்கட்கு மட்டும்.


## அடையாள அட்டை

சழிபுரத்தைச் சேர்ந்த திரு சிவனடியார் மகாலிங்கத்தின் அடையாள அட்டையை திரு. எம். எம். சௌபர்னும், பாவற்குளத்தைச் சேர்ந்த திரு. கருப்பையா சண்முகராசாவினுடைய அடையாள அட்டையை திரு கே. இந்திரகுமாரும், கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.


**ராணி** (யாழ்ப்பாணம்
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2 15,
SHARKY'S MACHINE
[Action-Packed Thrill)
**றீகல் மினி**
10-15, 2-00,
தியாகராஜன்-பானுசந்தர்
அர்ச்சனா-பாலுமகேந்திரன்
**நீங்கள் கேட்டவை**


## இந்திரா

(9ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரின் வரிசையில் திருமதி இந்திரா காந்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரும் அவரது அமைச்சர்கள் சிலரும் கடந்த மாதம் ஒரு பெரும் வெடிகுண்டுப் பயங்கரத்துக்குள்ளானுர்கள்..

அரசாங்கங்களில் மாற்றங்கள் தேர்தல் முறையிலல்ல துதலைவர்களைக் கொல்வதன் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன

இத்தகைய தன்மை ஆராயப்பட வேண்டியது; பலமான கண்டனத்துக்குரியது.

இந்திராவின் கொலையை யடுத்து கலவரங்கள் இந்தியாவில் வெடித்தன. ஆனுல் அங்கு அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் ரஜீவின் கீழ் கொண்டு வரப்பட்டது.

## மௌனத்தின்—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனுல் சிந்தித்துப்பதிலளிக்க முடிவதுமல்லாமல் பேசுபவரின் பேச்சையும் சிந்தனையையும் குழப்பாமல் இருக்க இடம் கொடுக்கிறது. இலங்கையில் நான் பலகுழுக்கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். இரண்டு மூன்றுபேர் ஒரே நேரத்தில் பேசப்பார்ப்பார்கள். இது பொறுமையின்மையும்போதிய பண்பின்மையையுமே காட்டுகிறது. ஆங்கிலேயர் உரையாடும் பொழுது பார்த்தால் அது ஒரு விருந்தாயிருக்கும். வேறு ஒருவர் ஏதாவது குறுக்கிட்டுப்பேச வேண்டிவந்தால் 'மன்னிக்கவும்' என்று கூறி, பேசுபவரின் அனுமதியுடனேயே பேசுவார், எங்கள் மக்களும் பொறுமையுடன் மௌனத்தின் நல்ல அம்சங்களை உணர்ந்தால் உரையாடுதல் மகிழ்ச்சியாயிருக்கும். அத்ாதாடு அர்த்தமுள்ளதாயும் பயனுள்ளதாயுமிருக்கும்.


## ரஜீவ் இலகுவாக ஆட்சியை அமைப்பார்

எட்டாவது இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெற விருக்கிறது கோடிக்கணக்கான இந்தியர்கள் வாக்களிப்பார்கள்.

திரு. ரஜீவ் காந்தி இலகுவாக ஆட்சியை மீண்டும் பெற்றுக் கொள்வார் என்றே நான் எதிர் பார்க்கிறேன்.

அடுத்த முக்கியமான விடயம் ரஜீவ் காந்தி பற்றியது. அவரிடம் அதிகாரம் இருந்தால் அல்லது இல் ாவிட்

(12ம் பக்கம் பார்க்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ராணுவத்தீர்வை நம்புவது ஆபத்திலேயே முடியும்"

## கம்யூ. யாழ். மாவட்டகுழு அறிக்கை

[யாழ்ப்பாணம்]

"தமிழ்தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமானதும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு அரசியல் தீர்வை பிரகடனம் செய்வதே தற்போதைய அவசர நடவடிக்கை. யாவும் அதனைவிடுத்து அனுவசியமாக கடும் இராணுவச் சட்டங்களை அமுல் நடத்தி தமிழ் பொதுமக்களை பலதுன்பதுயரங்களுக்குட்படுத்த யூ என் பி.அரசு இறங்கியமை" ஒரு அர்த்தமற்ற செயலாகும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்டக் குழுவின் செயலாளர் திரு. எஸ் விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இதன் விளைவு சிங்கள தமிழ் மக்களின் உறவுகளைப் பெரிதும் பாதிக்கும் நாட்டை பிளவுபடுத்த மேலும் வலுவூட்டும். தமிழ்நாடு இந்தியா போன்ற நாடுகளின் உதவியுடன் தான் இதன் தீர்விற்கான நடவடிக்கைகளை மேற்க்கொள்ள வேண்டும். இஸ்ரேல் அமெரிக்கா போன்ற நாடுகளை நம்பி செயல்படுவவன் மூலம் எமது நாட்டுப் பிரச்னைகள் சிக்கலாக்கப்படுமே தவிர தீர்க்கப்படப் போவதில்லை. இராணுவத் தீர்வை நம்பி இருப்பது ஆபத்தில் முடியும்".

மூவர் உயிர்தப்பினர்

# நாவாந்துறையில் விழுந்த ஹெலிகொப்டர்!

(அலுவலக நிருபர்)

நாவாந்துறை கடலில் நேற்று முன்தினம் இரவு வீழ்ந்த ஹெலிகொப்டரில் இருந்த மூவர் காயங்களுடன் உயிர் தப்பிவிட்டனர்! மற்றொருவருக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

நேற்று முன்தினமிரவு 8-45 மணியளவில் நாவாந்துறைக் கடல் ஏரியில் (சின்னக்கல்லடி என்று அழைக்கப்படும பகுதி) ஹெலிகொப்டர் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது விழும் பொழுது பலத்த சத்தம் கேட்டதாகக் கூறப்படுகிறது.

கடல் ஏரிக்குள் வீழ்ந்த ஹெலிகொப்டரை கண்டுபிடிக்க மேலும் ஒரு ஹெலிக்கொப்டர் தேடுதல் நடத்திய போதிலும் குறித்த இடம் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

அவ்விடத்தில் ஒளிபரப்பும் 'எறி குண்டு' போட்டுப்பார்த்தும் இடம் தெரியாததைத் தொடர்ந்து தேடுதல் நடத்திய ஹெலிகொப்டர் முகாமுக்குத் திரும்பியது.

தொடர்ந்து 11-30மணியளவில் நூற்றுக்கு மேற்பட்ட ராணுவத்தினர் குறிப்பிட்ட பகுதியைச் சுற்றிவளைத்துபாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் இப்பகுதி மக்கள் அச்சமடைந்து வீடுகளைவிட்டு வெளியேறிவிட்டனர்

மூழ்கிய ஹெலிகொப்டரை மீட்பதற்காக ஆயுதப்படையினர் பாரம்தூக்கும் இயந்திரம் ஒன்றை எடுத்துச்சென்றனர். அதன் மூலம் ஹெலிகொப்டர் வெளியில் எடுக்கப்பட்டது.

மூழ்கிய ஹெலிகொப்டரில் ஆகாயப் படையைச் சேர்ந்த பிளைட் ஆபீசர், இரு லெப்டினன்ட், ஒரு சிப்பாய் ஆகியோர் இருந்தனராம். (மா)

# பிரயாணிகள் அவலம்!

[யாழ்ப்பாணம்]

பிரயாணிகள் நிரம்பிவழிந்த நிலையில் யாழ். பஸ் நிலயத்திலிருந்து நேற்று முன்தினம் காலை புறப்பட்ட காரைநகர் பஸ் சுமார் 200யார் சென்றபின் பழுதடைந்து நடுவழியில் நின்றுவிட்டது.

சுமார் அரைமணிநேரத்திற்கு மேலாக, இ. போ. ச. மெக்காணிக்மார் முயற்சித்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

பிரயாணிகளில் பெண்களும் வயோதிபர்களும் அதிகமாக காணப்பட்டனர். இவர்கள் பஸ்ஸிலிருந்து இறங்கி நீண்ட நேரம் அவ்விடத்தில் காத்திருந்தனர். வேறுபஸ்களும் அவர்களுக்கு கிடைக்கவில்லை இப்பிரயாணிகள் மீண்டும் பஸ் நிலயம் சென்று கியூவில் நின்றனர். [க]

# மன்னாரில் நேற்று...

[மன்னார்]

மன்னாரில் நேற்று கடைகள் திறக்கப்படவில்லை, தனியார் வாகனமெதுவும் ஓடவில்லை. தள்ளாடி முகாமுக்கருகே தடைபோடப்பட்டு மன்னாரில் இருந்து வெளியேறும் வாகனங்கள் யாவும் மன்னாருக்கே திருப்பி அனுப்பப்பட்டது.

வீதிகள் எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டன. சன நடமாட்டமும் வெகு குறைவாகவே காணப்பட்டது எங்கு என்னநடக்குமோ என்ற பதற்றத்தில் மக்கள் பீதியுடன் உள்ளனர்.

## 15 பேர் கைது!

(கொழும்பு)

காங்கேசன்துறைப் பகுதியில் 15 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சு நேற்று அறிவித்தது.

ஈழமக்கள் புரட்சிவாத விடுதலை முன்னணி இயக்கத்தைச் சேர்ந்த உளளூர் தலைவர் ஒருவர் ஊர்காவற்றுறையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சுமேலும் தெரிவித்தது.

## கைதான 25பேரும் எங்கே?

(வவனியா)

வவனியாவில் கடந்த 25ம் திகதி ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 25பேரும் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

ந நாகேந்திரன், சூ. பேட்டி புதியராசா, நா. ரவிரதன் ம. லாசர் ஆகியவர்கள் வவுனியாவில் முள்தோட்டம் என்ற இடத்தில் கைது செய்யப்பட்டனர்.

## கொழும்பில் ஊரடங்கு

[கொழும்பு]

கொழும்பில் நேற்று இரவு 12 மணிமுதல் இன்றுஅதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டது.

## இந்திரா...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

டால் கூட இந்திய அரசியலில் மிக முக்கியமானவராக அவர் இருப்பார்.

வெளிநாட்டு உள் நாட்டு அரசியல் அவர் செய்யவேண்டிய பணிகள் நிறைய உண்டு. சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றுடன் வெளிவிவகாரம் தொடர்பாகவும், அஸாம், பஞ்சாப், காஷ்மீர் தொடர்பாக உள்நாட்டிலும் அவர் பல பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியவராக உள்ளார்.

ரஜீவிடம் மிகுந்த உறுதிப்பாடு காணப்படுகின்றது. ஆனால் இந்திராவின் பின் இந்தியா எப்படியிருக்குமென்பதற்குக் காலம்தான் பதில் கூறும்.

## கருணாநிதி

## தீவிரமானவர்

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திராவும் எம். ஜி. ஆரும் இலங்கையின் நலன் கருதியே செயல்பட்டனர்.

தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி இலங்கைத் தமிழர் விடயம் தொடர்பாக பலதீவிரமான பேச்சுக்களையும், கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்

தமிழ்நாட்டில் அவர் அதிகாரத்தைக் கைப்பற்றினால் தாம் தெரிவித்துள்ள தீவிர கருத்துக்களையே அவர் அமுல் படுத்தக்கூடும்.

பயங்கரவாதத்துக்கான மூல காரணத்தை அறிய வேண்டும். பயங்கரவாதத்தை எதிர்ப்பதால் மட்டும் எதுவும்சாதிக்கமுடியாது. அப் பயங்கரவாதத்திற்கான காரணங்களை அகற்றவே முன்வர வேண்டும்.

தமிழாக்கம்: அனந்த்

## மின்கம்பத்தில் இளைஞர்

(திருகோணமலை)

துப்பாக்கிச் சூடடுக் காயங்களுடன் மின்கம்பத்துடன் கட்டப்பட்ட நிலையில் துடிதுடித்துக்கொண்டிருந்த இளைஞரை பொலிசார் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் காலை அனுமதித்தனர்.

நிலாவெளி எட்டாவது கட்டையில் ஆறுமுகம் யோகராசா என்ற இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் மின்கம்பத்துடன் கட்டப்பட்டிருந்தார். இவர் அருகே காட்டிக்கொடுத்த சமூக விரோதி' என்ற குறிப்பும் இருந்தது.

பாதுகாப்பு கருதி இந்த இளைஞரை திருகோணமலை கடற்படை ஆஸ்பத்திரியில் பொலிசார் அனுமதித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்

## தம்பிமுத்து பாலசுப்பிரமணியம்

துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய உதவி ஆணையாளர் திரு. தம்பிமுத்து பாலசுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிமுத்து, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும். அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், கெங்காதரன், கமலாம்பிகையின் அன்புச் சகோதரனும், பாலபாஸ்கரன் (மனேஜர், மகாராஜா கூட்டுத்தாபனம்), பத்மபாஸ்கரன் (கணக்காளர், U. K.), Dr. பாஸ்கரன் (U K ), சத்தியபாஸ்கரன் [U. K.], பாலபவானி (Zambia), பாலநந்தினி, நித்தியபாஸ்கரன் [U. K.], ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவிமனோகரி, Dr செல்வராணி, வசந்தா [U. K.] குகதாசன் (கணக்காளர், Zambia), சிவாஜி, (U.K.) ஆகியோரின் அன்புமாமனாரும், கவிதா, கல்யாணி, பார்த்திபன், லக்ஷ்மி, லாவன்யன், ஜானகி, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [2-12-1984] ஞாயிறு காலை துன்னாலையில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்பாலயம்",
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

926

மட்டுநகரிலிருந்து

# யாழ்ப்பாணம் வர அனுமதிபெற வேண்டும்!

[இரா. உதயகுமார்]

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு மட்டகளப்பில் வேலைசெய்யும் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கு மட்டக்களப்பு கச்சேரியில் அரசாங்க அதிபர் எம் அந்தோனிமுத்து விடம் அனுமதியைப் பெறவேண்டும்

மேலும் இத்தகைய அனுமதியைப் பெறவிரும்பும் அரச ஊழியர்கள் தமது திணைக்கள தலைவர் ஊடாகவும் அரச ஊழியரல்லாத ஏனையோர் கிராம சேவையாளருடாக உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்து தனக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் கேரியுள்ளார்.

## இலங்கை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வின் கண்டனத்தை நேற்று வெளியிட்டார்.

இலங்கையின் குற்றச்சாட்டுகள் பொறுப்பற்றதும், யுத்த மனப்பிராந்திய நிலையிலும் சுமத்தப்பட்டவையென்றும் தெரிவித்த அவர், சமீபத்திய அரசின் வட பகுதிப் பாதுகாப்புச் சட்டவிதிகள் மிகவும் கடுமையானவை என்றும், சாதாரண மக்களை மிகவும்துன்புறுத்தக்கூடியனவாகவுள்ளன வென்றும் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்படவேண்டுமென்பதே இந்தியாவின் நிலையென்றும், நீண்டகாலமாக நடக்கும் அனைத்துக்கட்சி மாநாட்டின் மூலம் ஒரு தீர்வு ஏற்படுத்தப்படவேண்டுமென்பதையே இந்தியா விரும்புகிறதென்றும் அவர் கூறினார்

## சுட்டுத்தள்ளப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வள்ளமும் விமான-கடல்-தரை மார்க்கமாகத் துப்பாக்கிப் பிரயோகம்செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

தென்னிந்தியா விலிருந்து சுமார் 18 வள்ளங்களில் வந்த தமிழ்த் தீவிரவாதிகள் கோஷ்டியை வெற்றிகரமாக விரட்டியடித்துவிட்டதாக அவர் சொன்னார்

இலங்கை விமானப்படை விமானங்களே இந்தக் கோஷ்டியை விரட்டியடித்ததாக அவர் கூறினார்

அமைச்சர் நேற்று செய்தி நிருபர்கள் மாநாடொன்றை நடத்தினார். அப்போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு இவ் வள்ளங்களில் தீவிரவாதிகள் வந்தனர். நாட்டின் வடமேற்குக் கரையோரப் பகுதியில் இறங்க முற்பட்டபோது விமானப் படை துப்பாக்கியால் சுட்டது. இதனையடுத்து அவர்கள் வள்ளங்களிலேயே திரும்பிச் சென்றுவிட்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து இவர்கள் புறப்பட்டார்கள் என்றும் அமைச்சர் சொன்னார்.

தலைமன்னாரில் சுமார் ஐந்து மைல் தூரத்தில் இவ் வள்ளங்கள் வருவது கண்டுபிடிக்கப் பட்டது. அப்போது இந்த வள்ளங்கள் இலங்கை கடற்பிராந்தியத்திலே இருந்தன.

இதனை அவதானித்த விமானப்படை விமானங்கள் சுட்டபோது அவைஇந்தியா நோக்கி திரும்பிவிட்டன. இவ்வாறு தப்பியோடியது பற்றி இந்திய அரசுக்கு இலங்கை அரசு முறைப்பாடு செய்யும் என்றும் அமைச்சர் சொன்னார்.

## தீவிரவாதிகளின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாக வெளிவந்த அறிக்கைகளை மேற்கோள் காட்டி, தமிழ் ஈழத்துக்கான கடைசி யுத்தம் ஆரம்பமாகி விட்டதாக கூறியுள்ளார்கள் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் தமிழ்நாடு துறைமுகமாக வேதாரணியத்திலிருந்து இலங்கைக்கு வருகிறார்கள் என்றும் அவர் சொன்னார்

## ஏழு நாட்களுக்கு..

(1ம பக்கத் தொடர்ச்சி)

பிட்ட நிறங்கள்வழங்கப்படும்.

கண்டி-யாழ்ப்பாணம் றோட்டில் செல்லும் வாகனங்களுக்கு சிவப்பு, கே. கே. எஸ் -யாழ். றோட்டுக்கு நீலம் காரைநகர்-மானிப்பாய் பச்சை, குறிகாட்டுவான்- புங்குடுதீவு- வழுக்கையாறு-மஞ்சள், பருத்தித்துறை -யாழ் சிவப்பு, ஊர்காவற்றுறை-பண்ணை-யாழ் கறுப்பு, வசாவிளான் யாழ் வெள்ளை, பண்டத்தரிப்பு - சங்கானை-மானிப்பாய் பச்சை. காலையில் யாழ்ப்பாணம் வருவதற்கும் பிற்பகலில் திரும்பச்செல்வதற்குமே மட்டும் இந்த ஏற்பாடு; இடை நேரத்தில் பாவிக்கமுடியாது.

மேலும் கீழும் இருந்துபார்ப்பதற்கு லேசாகவே இந்நிறம் வழங்கப்படவுள்ளது.

இந்தச் சட்டவிதிகளை அமுல் படுத்த தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் நியமிக்கப்படுவார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org